விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 20 புதன்கிழமை (06.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# குழம்புகிறது காங்கிரஸ்! வருவாரா மன்மோகன்?


(புதுடில்லி)

**பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதற்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு வலுத்துள்ளதால் அக்கட்சியின் தலைமை குழப்பமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.**

பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதற்கு மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி, ஜெயந்தி நடராஜன், நாராயணசாமி மற்றும் ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இம்மாநாட்டில் பிரதமர் பங்கேற்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரணபாடான நிலைப்பாடுகளால் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஒப்புதல் வழங்கிய காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக்குழு, இது தொடரபில் அரசே முடிவு செய்யும் என்று தற்போது குறிப்பிட்டுள்ளது.



புதுடில்லியில் நேற்று முன்தினம திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளரிடம் இது தொடர்பாக கேள்வி எழுப்பியபோது, இது போன்ற உணர்ச்சிகரமான விவகாரங்களில் மத்திய அரசுடன் ஆலோசித்த பின்னர் தான் காங்கிரஸ் கட்சி

20-ம் பக்கம் பார்க்க

# பொதுநலவாய தலைவர் பதவி மகிந்தவுக்கு கிடைக்கக் கூடாது

## மன்னிப்புச்சபை நியூசிலாந்துக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை நியூசிலாந்து அரசாங்கம் எடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது பொதுநலவாய அமைப்பு தலைவர் பதவி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படுவதை நியூசிலாந்து எதிர்க்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் பேச்சாளர் கிராண்ட் பெயில்டோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள மனித உரிமை மீறல்களை நியூசிலாந்து கணக்கிலெடுக்காது இருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தூதுக்குழு மற்றும் மனு ஒன்றை நியூசிலாந்து பாராளுமன்றிற்கு சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று அனுப்பியுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# மாநாட்டில் இந்தியா பங்கேற்கத் தடை!

## கோரிய வழக்கு தள்ளிவைப்பு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என உத்தரவிட வேண்டும் என கேட்டு மதுரை உச்ச நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று செவ்வாயக் கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இந்த வழக்கின் ஆவணங்களை தாக்கல் செய்ய மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளோம். அவை வந்தவுடன் ஆய்வு செய்து பின்னர் வழக்கு விசாரிக்கப்படும். அதுவரை இந்த வழக்கை தள்ளி வைக்கிறோம் என்று நீதிமன்றத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய செய்திகளில் மேலும்

20-ம் பக்கம் பார்க்க

# இராணுவ ஜீப் விபத்து; இருவர் பலி ; மூவர் காயம்



(பூந்தோட்டம்)

வவுனியா கனகராயன்குளம் கொள்ளர் புளியங்குளம் பகுதியில் வீதியால் சென்ற மாட்டுடன் இராணுவ ஜீப் மோதியதில் இரு இராணுவத்தினர் பலியாகியதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

20-ம் பக்கம் பார்க்க

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு விழாவிற்கு நீதிமன்றம் அனுமதி

(சென்னை)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு விழாவுக்கு அனுமதி அளித்து உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு விழாவுக்கு காவல் துறை அனுமதி அளிக்கக்கோரி, பழ.நெடுமாறன் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், 2009 மே மாதம் இலங்கையில் நடந்த இனப் படுகொலையை நினைவுபடுத்தும் விதமாக தஞ்சாவூர் அருகே வாலூரில் முள்ளிவாய்க்கால் நினைவு முறறம் அமைக்கப்பட்டுள்ளது.

தனியார் நிலத்தை வாங்கி அதில் இந்த முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிராம ஊராட்சியின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

வரும் நவம்பர் 8,9 அல்லது 10 ஆகிய ஏதாவது ஒரு நாளில் திறப்பு விழா நடத்த திட்டமிட்டு உள்ளோம். இந்த விழாவை நடத்த மாவட்ட ஆடசியரும் அனுமதி அளித்துள்ளார்.

திறப்பு விழாவை நடத்த அனுமதி அளிக்குமாறும், காவல்துறை பாதுகாப்பு வழங்குமாறும் தஞ்சை தாலுகா காவல்துறையினரிடம் அகடோபர் 19ஆம் திகத மனு அளித்தோம். ஆனால்,

20-ம் பக்கம் பார்க்க

# அரசைத் தோற்கடிக்க பலமான கூட்டணி தேவை

## ஒன்றாக எதிர்ப்போம் என்கிறார் கரு

(கொழும்பு)

அடுத்து நடைபெறவுள்ள தேர்...களில் அரசாங்கத்தை தோற்கடிக... நோக்கம் கொண்ட கூட்ட...ணியை உருவாக்குவதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசி...க் கட்சி ஏனைய அரசியல் கட்சி...களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஒரு...மித்த நிலைப்பாட்டை அடைய ஏனைய எதிரணி அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கட்சிக்குள் காணப்பட்ட வேறுபாடு

20-ம் பக்கம் பார்க்க



# 150 படையினருக்கு மரண தண்டனை

## பங்களாதேஷ் நீதிமன்று தீர்ப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் 2009 ஆண்டில் இராணுவத்தின் பல உயர் அதிகாரிகள் பலியாகக் காரணமான கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டதற்காக அந்த நாட்டு பொதுமக்கள் நீதி மன்றம் ஒன்று குறைந்தபட்சம் 150 படையினருக்காவது மரண தண்டனை விதித்துள்ளது.

எல்லைத் துணைப்படையின் உறுப்பினர்கள் 150க்கும் அதிகமானோருக்கும், பல பொதுமக்களுக்கும் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. இந்த எண்ணிக்கை மிகவும் பெரியது.

800க்கும் அதிகமானோர் குற்றஞ்சாட்டப்பட்ட இந்த சிவில் நீதிமன்ற வழக்கில் ஒட்டுமொத்தமாக பலருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

இவர்கள் எல்லாரையும் ஒன்றாக விசாரிப்பதற்காக ஒரு சிறப்பு நீதிமன்றத்

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.சத்திரத்துச்சந்தி வள்ளுவர் சிலை யாழ்.பொதுநூலக முன்றலுக்கு மாற்றம்

## வாகன நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் இருந்த வள்ளுவர் சிலை அகற்றப்பட்டு யாழ்ப்பாணப் பொதுநூலக வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

யாழ்.நகரத்தில் நாளாந்தம் ஏற்பட்டு வரும் வாகன நெருக்கடி மற்றும் சனநெருக்கங்களை கவனத்தில் கொண்டு, யாழ்.ஆஸ்பத்திரி வீதி-கே.கே.எஸ்.வீதி சந்திக்கும் சத்திரத்துச் சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படுவதால், சந்தியில் உள்ள வள்ளுவர் சிலையை அகற்றி, அதனை யாழ்.பொதுநூலக முன்றலில் வைப்பதென ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# கட்டடப் பொருள் விற்பனை நிலையத்தில் திருடர்கள் புகுந்து கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பகுதியில் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் நேற்று அதிகாலை பாரிய திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்தியிலுள்ள கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையத்திலேயே இந்த திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையத்தினை அதன் உரிமையாளர் பூட்டிவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் நேற்றுக்காலை மறுபடியும் வந்து வர்த்தக நிலையத்தினை திறக்க முற்பட்டபோது ஏற்கெனவே திறந்திருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதனையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார் அந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர்.

இதேவேளை குறித்த விற்பனை நிலையத்திலிருந்த பெறுமதியான பொருட்களுடன் அங்கிருந்த தொலைபேசியையும் விட்டு வைக்காது திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸாரிடம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாகவுள்ள கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# பொன்.காந்தன், வேழமாலிகிதன் நேற்று திடீர் விடுதலை

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் செயலாளரான பொன்னம்பலம் லட்சுமிகாந்தன் (பொன்.காந்தன்) மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரான அருணாசலம் வேழமாலிகிதன் ஆகியோர் குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பொன்.காந்தன் மற்றும் அ.வேழமாலிகிதன் ஆகியோர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா, கெலும் ஒபயசேகர மற்றும் கே.சயந்தன் ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராயிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்களின் குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்பதுடன் இவர்கள் உண்மைக்கு புறம்பான வகையில் கைது செய்யப்பட்டமையால் வழக்கிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலையின் பின்னணியில் கைது செய்யப்பட்டவர்களிடம் இதுவரை குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை. கைதுக்கான காரணத்தையும் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

வெடி பொருட்கள், ஆபாச பொருட்களை கைப்பற்றிய முறையில் குழப்பம் ஆகிய காரணங்கள் இவர்களது விடுதலையில் தாக்கம் செலுத்தியிருந்தன.

உடல், உள ரீதியாக பொன்.காந்தன் பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு பாதிப்புக்குள்ளானமை தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா, சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை கேட்டிருந்த நிலையில் இவர்கள் இருவரும் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி நிரோசா பெனான்டோ முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-11)

# மின்தடை


(மல்லாவி)

ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங்கேணி வரையிலான பிரதேசத்தில் இன்று காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என முல்லைத்தீவு மாவட்ட மின்னத்தியட்சக ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார்.

வீதியின் கரையோரங்களில் இருக்கும் உயரமான மரங்களை வெட்டி அகற்றவே இவ்வாறு மின்சாரம் தடைப்படும் என அவர் தெரிவித்தார்.

(செ-15)

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் பரலோகநாதன்

(முன்னாள் ஆசிரியர், அசோகா வித்தியாலயம், கண்டி)

அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பரலோகநாதன் அவர்கள் 04-11-2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் மகாலட்சுமி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற ஐயாத்துரை பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் நர்த்தனாவின் (மாணவி, கண்டி/பெண்கள் உயர்தரப் பாடசாலை) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவலோகநாதன், சிவகாந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலேந்திரன், தனலட்சுமி, இந்திராணி, திலகராணி, யோகநாதன், வரதன், சியாமளா ஆகியோரின் மைத்துனரும், சிவணேசதாசன், புஸ்பராஜ், மீனாள், சுவாவதி ஆகியோரின் சகலனும் காயத்திரி, கார்த்திகன் ஆகியோரின் பெரியப்பாவும் பிரியங்கா, நிருத்திகா ஆகியோரின் சித்தப்பாவும் நிவேதா, பகீரதி, ஸ்ரீராகவி, மதுமிதா, கஜீவன், நான்சி, தருண் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து நாளை வியாழக்கிழமை (07-11-2013) பிற்பகல் 3 மணியளவில் கண்டி மஹியாவை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளிற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

128/25B விஹார மாவத்தை,
முல்கம்பொல, கண்டி.
081-2200366, 077-3312202

(4429)

தகவல் :
- குடும்பத்தினர் -

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 11 - 1937

மறைவு 16 - 11 - 2012

அமரர்

## திருமதி சரஸ்வதி சங்கரப்பிள்ளை

எம்மைப் பெற்று வளர்த்துப்
பேணிக்காத்து அன்பும் பாசமும்
ஊட்டி வளர்த்த தெய்வமே!
ஊர் புகழும் வாழ்வு தந்து
ஏற்றமுற வைத்தீர்
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சமதில்
உங்கள் நினைவுகள் என்றும் பசுமையானவை

பாசமிகு அன்னையே
பாரினில் நீ இன்றில்லை
சீர் சிறப்புடன் வாழ்ந்த உம்மை
ஊர் போற்றுகிறது உறவுகள் போற்றுகிறது
ஆண்டொன்று சென்றாலும் உம் நினைவில்
பேர் சொல்லும் பிள்ளைகள் நாம்
பேதலித்து நிற்கின்றோம்

எம் நெஞ்சில் நிலையான தீபமான
அம்மா உங்களின் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல அம்பன் வரசித்தி விநாயகர்
பாதம் பணிந்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அம்பன், குடத்தனை.

- குடும்பத்தினர் -

(சி-5403)



இன்று (06-11-2013) சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...

# ஆன்மீகப் போராட்ட 22ஆம் ஆண்டுப் பூர்த்தி வழிபாடு

பி.ப. 3.00 மணியளவில் விஷேட அபிஷேகம், பூசை வழிபாடு, சுவாமி வீதியுலா நடைபெறும்.

(4427_ சோழியூரான் - பிறைசூடிக் குரு.

## இன்று ஒரு தகவல்

### அர்த்த பஞ்சகம்

நாம் ஒரு செயலில் இறங்குவதற்கு முன் ஆலோசனை செய்ய வேண்டிய விடயங்கள் ஐந்து உண்டு.

உதாரணமாக ஒருவன் கடைக்குப்போய், ஒரு பொருளை வாங்குகிறான் என்று வைத்துக்கொள்வோம்.

முதலில் அவன் ஐந்து விடயங்களைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக "அந்தப் பொருள் எப்படிப்பட்டது?" என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாகதன்னைப்பற்றிதெரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான்அந்தப்பொருள்தனக்குத்தேவையா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியும்!

மூன்றாவதாக அந்தப் பொருளை அடைவதற்கான வழி என்ன? எவ்வளவு பணம் கொடுத்தால் அது கிடைக்கும் என்றும் நான்காவதாக, அந்தப் பொருள் அடைவதன் மூலம் நாம் அடையக்கூடிய பயன் என்ன? என்றும் ஐந்தாவதாக, அந்தப் பொருளை அடைவதற்கு இருக்கக்கூடிய தடை எது? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்படி சின்னச் சின்ன விடயங்களில் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பேரின்ப நிலை போன்ற சமாச்சாரங்களிலும் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குப் பெயர் அர்த்த பஞ்சகம்.

வைணவ சமயத்தில் அர்த்த பஞ்சகம் என்பது ரொம்பப் பெரிய விடயம்! கடைக்குப் போவது மாதிரி கடவுளைப் பார்க்கப் போகும் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் பரம்பொருள் என்பது என்ன? அதன் தன்மைகள் என்ன? - என்பதைத் தெரிந்துகொள்ள வேண் டும். இதற்கு பரமாத்ம ஸ்வரூபம் என்று பெயர்.

இரண்டாவது, நாம் யார்? நம்முடைய தன்மைகள் என்ன? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் யார்? என்று நமக்கே தெரியவில்லை எனும்போது "நான் சொல்கிறேன், இது என்னுடையது" என்று சொல்வதும் தவறுதானே!

மூன்றாவது விடயம், பரம்பொருளை நாம் அடைவதற்குரிய வழி எது? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு உபாய ஸ்வரூபம் என்று பெயர்.

நான்காவது விடயம், நாம் அடைய வேண்டிய பயன்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வது. இதற்கு புருஷார்த்தம் என்று பெயர்.

ஐந்தாவது, அந்த பயனை அடைய விடாமல் தடுக்கும் தடைகள் எவை என்று தெரிந்து கொள்வது. இது விரோதி ஸ்வரூபம்.

என்ன சார் இது... தகவலில் ஏதாவது கதை சொல்வீர்கள் என்று பார்த்தால் "ஏதோ தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறீங்க" என்று நீங்கள் நினைக்கலாம்.

இது தெரிந்துகொள்ள வேண்டிய விடயம்தான். காதில் போட்டு வையுங்கள். தக்க காலத்தில் உபயோகப்படும்.

ஒரு நண்பர் ஒருவர், "சார் அடுத்த மாதம் ஒரு கல்யாணம்! போறதா வேண்டாமா என்று குழப்பமாக இருக்கிறது!" என்றார்.

நான் உடனே அர்த்த பஞ்சக உபதேசம் பண்ண ஆரம்பித்தேன். அவர் எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுவிட்டு, "சரிசார்... நான் போவது என்று முடிவு செய்து விடடேன்" என்றார். "எப்படி இந்த முடிவுக்கு வந்தீங்க?" என்று கேட்டேன்.

"நீங்க சொன்ன இரண்டாவது பொயின்டைப் புரிந்து கொண்ட பின்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்!" என்றார்.

அதாவது, தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னீங்க. உடனே என்னைப்பற்றி புரிந்து கொண்டேன். நான் யார் என்பது எனக்குத் தெரிந்தது. உடனே போவதுதான் நல்லது என்று முடிவு செய்து விட்டேன்! என்றார்.

"நீங்க யார்?" என்று கேட்டேன்.

"நான் தான் அந்த கல்யாணத்தில் தாலிகட்ட வேண்டிய மாப்பிள்ளை!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வளமான விவசாய நிலங்களை இராணுவம் விடுவிக்க வேண்டும்

## வடக்குவிவசாய அமைச்சர் கோரிக்கை

தமிழ் மக்களின் வளமான விவசாய நிலங்கள் மட்டுமல்லாது, வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சுக்கு உரித்தான பண்ணைகள் கூட இராணுவத்தினர் வசம் உள்ளன. வடக்கு மாகாண பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு இனிமேலும் தடையாக நிற்காது இந் நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடலும் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கும் நிகழவும் நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது விவசாயிகள் பாரம்பரிய வேளாண்மை விவசாய முறைகளில் கைதேரந்தவர்கள். எமது மண்ணுக்கே உரித்தான பாரம்பரிய விதைகள் எவை எனபது பற்றியும், அவற்றின் விதைப்புக்காலம் பறறியும், அவற்றுக்கு இடவேண்டிய இயற்கைப் பசளைகள்பற்றியெல்லாம்போதிய பட்டறிவைக் கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயம், எமது இயற்கைச்சூழலுக்கும் காலத்துக்கும் ஒவ்வாத நடைமுறைகளையும் பின்பற்றி வருகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

உலகின் நீர்ப்பற்றாக்குறையை எதிரகொண்டுள்ள நாடுகள் தூவல் நர்பபாசனம், சொட்டு நீர்ப்பாசனம்என்று மாற்று நவீன நீர்ப்பாசன உத்திகளைக கையாளத் தொடங்கியுள்ளன. அது மட்டுமல்லாது நீர் அதிகம் தேவைப்படாத பயிரகளை அடையாளம் கண்டு பயிரிடவும் ஆரம்பித்துள்ளனர்.

ஒரு கிலோ அரிசியை அறுவடை செய்வதற்கு ஏறத்தாள 3400 லீற்றர் தண்ணீரும், ஒரு கிலோ சோளத்தை அறுவடை செய்வதற்கு 900 லீற்றர் தண்ணீரும்செலவாகிறது இதுபோனறு நாமும் நமது பாரம பரிய விவசாய அறிவோடு நவீன விவசாயத் தொழில் நுட்பங்களையும் அறிவையும் உள்வாங்கினாலே எமது விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். வடக்கு மாகாண விவசாய அமைசசுக்கு சொந்தமான விதை உற்பத்திப் பண்ணை, தாய்த் தாவரப்பண்ணை, அலுவலகங்கள் என்று 400 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவை இராணுவம் தன்வசப்படுத்தி வைத்திருக்கிறது. இந் நிலையில் நாம் எமது விவசாயத் துறையை எவ்வாறு மேம்படுத்த முடியும்? எனவே, இனிமேலாவது இராணுவத்தை எமது வேளாண்மை நிலங்களில் இருந்து வெளியேற்றி, வடக்கின் விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர மேலும் தெரிவித்தார். (அ-2-6-250)

# காங்கேசன்துறை கடற்பரப்பில் 30 இந்திய மீனவர்கள் கைது

இந்திய மீனவர்கள் 30 பேரை காங் கேசன்துறை கடற்படையினர் கைது செய்துள் ளனர். இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே மேற்படி மீனவர்கள் 30 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்த இந்திய மீனவர்கள் நேற்று முன் தினம் நள்ளிரவு கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இராமேஸ்வரத்தை சேர்ந்த 6 மீனவர்களும் புதுக்கோட்டையின் ஜனதா பட்டினத்தைச் சேர்ந்த 24 மீனவர்களும் உள்ளடங்குகின் றனர்.

கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ள மீனவர்கள் 30 பேரும் காங்கேசன் துறை பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டுபொலிஸாரால் நீரியல் வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். நீரியல் வளத் திணைக்களம் இம் மீனவர்களை நீதி மன்றில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள கொண்டுள்ளதாக யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக் களப் பணிப்பாளர் என். கணேஷமூர்த்தி தெரிவித்தார். இதேவேளை அண்மைக் காலங்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதி கடற் பரப்பில் அதிகரித்து காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 140 |
| தக்காளி | 100 | 90 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 80 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 160 |
| பாகற்காய் | 200 | 110 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 30 | 60 |
| பயற்றங்காய் | 120 | 90 | 80 |
| லீக்ஸ் | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 40 | 80 |
| போஞ்சி | - | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 250 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35-45 |

## இராசி பலன்

06.11.2013

(ஐப்பசி 20, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

திருதியை பிற்பகல் 1.43 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.53 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சுபநேரம் 4.35-6.05 மணிவரை

**மேடம்** சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக முயற்சி எடுக்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**இடபம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், ஆரோக்கியம் சீராகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** புதிய பாதை புலப்படும் நாள், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றி மறையும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்து கொள்வது நல்லது, தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** என்றோ நடக்கும் என நினைத்த காரியம் இன்று நல்லபடியாக நடைபெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கப் பெறுவீர்கள், உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

வளவன்

# யுவதியை தாக்கிவிட்டு கைப்பை அபகரிப்பு

## இரண்டு இலட்சம் ரூபா அபேஸ்

(நவாலி)

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீழ்த்தி விட்டு அவரின் கைப் பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.


இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் வங்கியிலிருந்து 2 இலட்சம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு குறித்த பெண் துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்.

அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த யுவதியை துவிச்சக்கர வண்டியுடன் சேர்த்து தள்ளி வீழ்த்தி விட்டு கைப் பையை திருடிச் சென்றுள்ளனர்.

கைப்பையினுள் 2 இலட்சம் ரூபா பணமும் முக்கிய ஆவணங்கள் பலவும் இருந்துள்ளன. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-26)




(நன்றி:-மிரர்)

# காணி அற்றோருக்கு காணி வழங்க நடவடிக்கை எடுங்கள்

## வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

(தும்பளை)

கட்டைக்காடு, நித்திய வெட்டைப் பகுதிகளிலுள்ள அரசகாணிகளை காணி யற்றோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வடமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காடு சென்மேரிஸ் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வழங்கப்பட்டுள்ள கோரிக்கை கடிதமொன்றிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கட்டைக்காடு, நித்தியவெட்டை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய, முள்ளியான் ஜே/433 கிராம அலுவலர் பிரிவில் வீடற்றோருக்கு வீடுகள் அமைப்பதற்கான வேலைத் திட்டமும், சேதமுற்ற வீடுகளை புன ரமைப்பதற்கான வேலைத்திட்டமும், சுவிஸ் அபிவிருத்தி அமைப்பினால் முன்னெடுக்கப் படவுள்ளது.

இந்நிலையில் காணியற்ற குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கான உதவிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என மேற்படி அமைப்பினால் உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்விரு கிராமங்களிலும் 90க்கு மேற்பட்ட குடும்பங்கள் காணி யற்ற நிலையிலுள்ளன. இதனால், இக் குடும்பங்கள் வீடமைப்புத் திட்டத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டை க்காட்டு கிராமத்தில், சுனாமி திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டு, மிகுதியாகப் பல வெற்றுக்காணித் துண்டுகள் உள்ளன.

இதை விடவும் கட்டைக் காடு, நித்திய வெட்டைப் பகுதியில் தேவையானளவு அரச காணிகளும் உள்ளன.

எனவே யுத்தம், சுனாமி ஆகியவற்றால் இடம்பெயர்ந்து, பல வகையிலும் பாதிக்கப்பட்டு, மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு, வீட்டுத் திட்ட த்தைப் பெறுவதற்கு துரிதமாக காணிகள் வழங்கப்படுவதற்கு ஆவன செய்து தருமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5-19)

# யாழ். மாவட்டத்தில் முதலாவது புற்றரை துடுப்பாட்ட மைதானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் நிதியுதவியுடன் யாழில் முதலாவது புற்றரை துடுப்பாட்ட மைதானம் அமைக்கும் பணிகள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவர் சனத் ஜெயசூரிய யாழில் முதலாவது புற்றரை துடுப்பாட்ட மைதானம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் அமைக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்- கடந்த வெள்ளிக்கிழமை முதல் புற்றரை மைதானம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


யாழ்.மாவட்ட துடுப்பாட்ட வீரர்கள் இதுவரை காலமும் மற்றிங் (சாக்கு விரிப்பு) துடுப்பாட்ட மைதானங்களையே பயன்படுத்தி வந்தனர்.

மேற்படி மைதானத்தில் விளையாடி பழக்கப்பட்ட யாழ். மாவட்ட துடுப்பாட்ட வீரர்கள் வெளி மாவட்டங்களில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது புற்றரை மைதானம் பெரும் சவாலாக அமைந்திருந்தது.

இப் புற்றரை மைதானத்தில் பந்து வீச்சாளர்கள் பந்து வீசுவதிலும் துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சுக்களை எதிர்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் யாழில் இந்த புற்றரை துடுப்பாட்ட மைதானம் பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-9-23)

# எழுத்துப் பிழைகளுடன் பாலர்களுக்கான நூல்கள்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சில புத்தக நிலையங்களிலும் நடமாடும் புத்தக விற்பனைகளிலும் சிறுவர்களுக்கானகதைப்புத்தகங்கள், விளக்கப் படங்கள் என்பனவற்றில் எழுத்துப் பிழைகளும் கருத்துப் பிழைகளும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முன்பள்ளி மாணவர்கள், சிறுவர்கள் தவறான உச்சரிப்புடன் சொற்களை கையாள்வதாகவும் இவ்வாறான நிலைமை தொடருமாயின் எதிர்கால மாணவர்களின் தமிழ்மொழித்திறன் கவலைக்குரியதாக அமையும் எனவும் அச்சம் வெளியிடப் பட்டுள்ளது.

இதன்படி சில விளக்கப்படங்களில் வேற்று மொழி உச்சரிப்பு தமிழ்ப்பெயராக வழங்கப் பட்டுள்ளதோடு சில இடங்களில் எழுத்துப் பிழைகளுடனும் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பேருந்து நிலையத்திலும் யாழ்ப் பாணத்தின் சில புத்தகசாலைகளிலும் சில நடைபாதை வியாபாரிகளாலும் இவ்வாறான எழுத்துப்பிழை மற்றும் கருத்துப் பிழைகளுடனான நூல்கள் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதேவேளை இவ்வாறான நூல்களை வாங்கி சிறுவர்களுக்கு கொடுக்கும் பெற்றோர் இவற்றைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டுமெனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

எனவே மாணவர்கள் தமிழ்மொழியில் மருவிச் செல்லும் நிலையை உருவாக்கும் இவ்வாறான தவறுகளைக் கவனத்தில் எடுத்து தமிழையும் தமிழ் மாணவர்களின் தமிழறிவையும் நிலை நிறுத்த கல்வி அதிகாரிகள், கல்வியியலாளர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-5)



கரவெட்டி பிரதேச செயலகத்தில் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலு உடையோர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# இளைஞர் குழுவின் அட்டகாசத்தை பொலிஸார் தடுக்க வேண்டும்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி தெல்லிப்பழை வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் முன்னால் விடுமுறை தினங்களில் கூடும் இளைஞர்கள், மாணவர்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மேற்படி இடத்தில் மது அருந்திவிட்டு சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இளைஞர்கள் கூடிநின்று கல்வி கற்பதற்கு செல்கின்ற மாணவிகளுக்கு இடையூறு விளைவிப்பதோடு வீதியால் செல்பவர்களுடன் தகராறிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்செயற்பாட்டினால் கல்வியை கற்பதில் குறித்த தனியார் கல்வி நிறுவனம் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகிறது.

அத் தோடு வீதியால் பயணிப்பவர்களும் அச்சத்துடன் செல்கின்றனர்.

இவ் இளைஞர்களின் அட்டகாசம் கடந்த சில வாரங்களாகவே இடம்பெற்று வரு வதாக பிரதேசவாசிகளால் தெரிவிக்கப்படுகி றது.

எனவே மதுபோதையில் நின்று குழப்பம் விளைவிக்கும் இளைஞர்களின் அட்டகாசத்தை நிறுத்த பொலிஸார் முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-17)

# கசினோ நிலையம் முற்றுகை; 48 பேர் கைது செய்யப்பட்டனர்

சட்டவிரோதமாக இயங்கி வந்த கசினோ நிலையத்தை திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் சுற்றிவளைத்து 48 பேரை கைது செய்துள்ளனர்.

கொம்பனி வீதி பொலிஸ் பிரிவிலுள்ள லிப்டன் சுற்று வட்டத் துக்கு அருகில் இந்த சட்டவிரோத கசினோ நிலையம் இயங்கி வந்ததாகவும் நீண்டநாள் கண்காணிப்பின் பின்னர் இந் தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டத்ாகவும் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கொம்பனி வீதி நீதவான் நீதிமன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்கான அனுமதியுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய அவர் இதன் போது குறித்த கசினோ நிலையத்திலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட் டதாக தெரிவித்தார். (அ-2)

## கந்தசஷ்டி பூஜை

சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் ஆலயத்தில் கந்தசஷ்டி பூஜைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பாகி நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு அபிஷேகமும் பிற்பகல் 3.30 மணிக்கு சூரசங்காரமும் பிற்பகல் 4.30 மணிக்கு விசேட பூஜைகளும் இடம்பெறவுள்ளன.மறுநாள் சனிக்கிழமை 4.30 மணிக்கு திருக்கல்யாண வைபவம் இடம்பெறும். (அ-9-17)


## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

☆ நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

☆ இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

☆ எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அதிர்ஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

☆ மற்றும் தூரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

☆ இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தை பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:

**சிவா நறுமணப் பூங்கா**

இல. 288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திர சந்திக்கு அருகில்) தொ.பேசி. : 021 222 2567

(ஞ/5249)


## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

தென்மராட்சி கலை மன்றத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வ ரும் 10 ஆம் திகதி ஞாயிற்குக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவன் கோவில் வீதி சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சிக் கலை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சிக் கலை மன்றத்தில் அக்கறையும் பொதுமக்கள் சேவையில் அர்ப் பணிப்பும் சமுதாய வளர்ச்சியில் ஆர்வ முள்ள அனைவரையும் குறித்த தினத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். கலை மன்றத்தில் அங் கத்தவர்களாக இணை ந்து கொள்ள விரும்புபவர்கள் கூட் டம் நடை பெறும் தினத்தன்று இணைந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-29)

## ஐ.தே.க. தலைமை குறித்த பேச்சில் முன்னேற்றம்

கட்சித் தலைமை குறித்த பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அவர் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவைக்கான அதிகார ஒதுக்கீடு தொடர்பில் இந்த பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிடம் யோசனைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன

இதேவேளை, சில யோசனைகளை அமுல்படுத்துவதற்கு கட்சியின் யாப்பில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம் : 06 ஆதன இலக்கம்: 106
சாவற்கட்டு வீதி, ஆனைக்கோட்டை

வட்டாரம் 06 சாவற்கட்டு வீதி, ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 106 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய், கோவில்பற்று, ஆனைக்கோட்டை இறை 'பழவளவும் தங்கன் தோட்டமும்' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 16.64 இவ்வாதனமானது ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த யோகேந்திரன் பெண் சாரதாதேவி அவர்களால் அறுதி உறுதி மூலம் மகேந்திரலிங்கம் பெண் அன்புராணி ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14983 ஆம் இலக்க 13.04.2013 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். பழவளவும் தங்கன் தோட்டமும் நிலப்பரப்பு குளி 16.64 உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் மகேந்திரலிங்கம் பெண் அன்புராணி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (4426)


## யா/பரமேஸ்வரா வித்தியாலயம்
### திருநெல்வேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### 2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்


செல்வன் கிருஸ்ணன் பீஸ்மன் 157


செல்வி தயானந்தன் டிலக்சனா 156


செல்வி யோகரட்ணம் சரண்யா 154

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்கள்

| | |
|---|---|
| செல்வன் இராசலிங்கம் ருஷாங்கன் | 139 |
| செல்வி சந்திரகுமாரன் கவிஷனா | 136 |
| செல்வி சிவராசா அமினா | 136 |
| செல்வன் பாஸ்கரன் ஆகாஷ் | 135 |
| செல்வி பிருந்தாபரன் தனசாயினி | 133 |
| செல்வி சிவலிங்கம் மதுஷா | 129 |
| செல்வன் தயாளன் துவாரகன் | 129 |
| செல்வன் சந்திரன் வினோத்ராஜ் | 126 |
| செல்வி தியாகரன் சஞ்சிகா | 112 |
| செல்வன் ஜெயந்தன் லக்ஷன் | 109 |

மேற்படி மாணவர்களையும் இவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் திருமதி ப.ஜெயராசா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
SDS, SDC, OSA



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து (Ko)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா : 7 .25<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: A/L / சுவிஸ் (Not PR)<br>தொ.இ: B/2444 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா : 19.5 சூரி செவ் 10 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2531 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா : 59 செவ் 8 ல்<br>உயரம்: 5'8"<br>த்கைமை/தொழில்: A/L, கட்டட வரைபடம் தயாரித்தல் (சொந்தம்)<br>தொ.இ: B/2446 | பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா : 46.5 செவ் 8 இல்<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2532 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா : 14.75 செவ் 8 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDA / (Canada-Work Permit)<br>தொ.இ: B/2447 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா : 12.25 சூரி செவ் 9<br>தகைமை/தொழில்: M.Sc, PHD / Research Assistant<br>தொ.இ: G/2533 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா : 63 (சூரி, செவ் 8 ல்)<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / ஜேர்மன்<br>தொ.இ: B/2448 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா : 11 செவ் 12 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.A , MA<br>நிதிக்கிளை தொ.இ: G/2536 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# வடக்கு மக்களின் பூர்வீக நிலங்களை அழிப்பதில் அரசு அக்கறை காட்டுகிறது

## அரியம் எம்.பி.கொதிப்பு

(கொழும்பு)

**வலிகாமம் வடக்கு மக்களின் பூர்வீக நிலங்களில் உள்ள வீடுகளை அழித்தொழிக்கும் செயற்பாடுகளில் இலங்கை இராணுவம் மிகுந்த அக்கறை காட்டி வருவது இந்நாட்டில் எவ்வாறான ஆட்சி முறை நீடிக்கின்றது என்பதனை சர்வதேசத்துக்கு கோடிட்டுக் காட்டுகின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

வலிகாமம் வடக்கு மக்களின் பூர்வீகமான நிலங்கள் நாளுக்கு நாள் இராணுவத்தினரால் திட்டமிட்டு அபகரிக்கப்படுவது தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

எம்மவர்களின் அகிம்சைப் போராட்டம், ஆயுதபோராட்டம் என்பன ஓய்ந்ததன் பின்னர் எம்மினம் அனைத்தையும் இழந்த ஒரு இனமாகவும், இருக்கின்ற உடைமைகளையும் இழந்து கொண்டிருக்கின்ற இனமாகவும் இன்று இந் நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள.

வலிகாமம் வடக்கு மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படும் செய்திகளைக்கேட்டு எமது பாராளுமன்ற, மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் அங்கு சென்று பார்த்துக் கொண்டிருக்கையிலே இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் அவர்களது வீடுகளை இடித்தழித்தார்கள்.

ஏற்கனவே இது தொடர்பான பல வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது. அதனையும் பொருட்படுத்தாது இந்த நாட்டிலுள்ள இராணுவத்தினர் ஆட்சி அதிகாரங்களை தங்களது கைகளில் வைத்துக்கொண்டு வடகிழக்கு மக்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதிலே குறியாக இருந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

ஒரே தேசம் ஒரே நாடு என்று கூறுபவர்கள் எப்படி திட்டமிட்ட வகையில் தமிழர்களின் நிலங்களை அபகரிக்க நினைக்கின்றார்கள், நீதிமன்றங்கள் சரியான தீர்ப்பை வழங்கினும அதனையெல்லாம் முறியடித்து தீர்ப்பை வழங்கும் வல்லமையினை இந்நாட்டு இராணுவத்தினரிடமே ஒப்படைக்கப்பட்டு இருப்பதனை இவ்வாறான சம்பவங்கள் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் மக்களின் சொந்த வீடுகளுக்குள் அவர்கள் சென்று அமர்வதற்குக் கூட முடியாத நிலையிலேயே உள்ளனர்.

அப்படி அங்கு சென்ற போதிலும் உங்களுக்கு இந்த இடம்சொந்தமில்லை. நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதனை எடுக்கலாம் என்று பதில் கூறுகின்ற அளவிற்கு இந்த நாட்டிலே ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது.

இன்று வடமாகாண முதலமைச்சராக இருக்கும் விக்னேஸ்வரனை தென்பகுதிக்கு வரக்கூடாது என விமல் வீரவன்ச போன்ற கடும்போக்கு அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள்.

அவர்கள் அப்படி கூறுவார்களேயானால் இந்த நாட்டில் இரு பிரதேசங்கள் இருக்கின்றது என்பதனை ஒப்புக் கொள்கின்றார்களா? ஒரே நாடு ஒரே தேசம்என்று கூறுபவர்கள எப்படி எமது முதலமைச்சரை தென் பகுதிகு வரக்கூடாது என்று கூற முடியும்.

அவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் கொழும்பில் அத்து மீறிக் குடியேறவில்லை. ஆனால் நீங்களோ எங்கள் தமிழர் தாயகப்பகுதிகளில் அத்து மீறிய குடியேற்றத்தினையே மேற்கொள்கின்றீர்கள்.

அதனை செய்வதனை நிறுத்துஙகள. சிங்கள மக்கள் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் திட்டமிட்ட வகையில் பூர்வீகமாக வாழ்ந்த இன்னுமொரு இனத்தின் நிலத்தை ஆக்கிரமித்து வாழ நினைப்பது எந்த வகையில் பொருத்தமானதாகும்.

இன்று வலிகாமம் வடக்கில் இடம் பெறும் சிங்களக் குடியேற்றம் நன்கு திட்டமிட்ட முறையில் இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றுள்ளது. (அ-2)

# இசைப்பிரியாவின் படுகொலை குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும்

## சம்பந்தன் எம்.பி.வலியுறுத்து

இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் உண்மைகள் கண்டறியபபட உரிய விசாரணைகளை மேறகொள்ள வேண்டியது இலங்கை அரசின் கடமையாகும்.

இதைத் தட்டிக்கழித்தால் பாரதூரமான விளைவுகளை இலங்கை அரசு சந்தித்தே தீரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இசைப்பிரியா தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள காணொளியை இலங்கை அரசும் இராணுவமும் நிராகரித்துள்ளன.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சனல் 4 காணொளியில் இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் வெளிவந்த காட்சிகள் அனைத்தும் உணமையானவை என்று அதனை பார்த்த அனைவரும் கூறுகின்றா ர்கள்.

இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் இந்த கொடூரத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

எனவே, சனல் 4 வெளியிட்ட காணொளியை போலி என கூறி அரசு நிராகரிக்க முடியாது.

இது சனல 4 விடயமல்ல, இசைப்பரியா படுகொலை விடயம் என் பதை அரசு மனதில் கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். உணமைகள் கண்டறியப்பட வேணடும. இது இலங்கை அரசின் கட மையாகும்.

இதை தட்டிக்கழிக்கின், பாரதூரமான பின்விளைவுகளை இலஙகை அரசு சந்தித்தே தீரும்.

நாட்டில் மனித உரிமைகள், சட்டங்கள் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று இலங்கை அரசு கூறுகின்றது.

இது உண்மையானால் இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையை கண்டறிய வேண்டும்.

அரசு ஏன் இதற்கு தயக்கம் காட்டுகின்றது? இந்தப் படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் பார்வை இலஙகையின் பக்கம் திரும்பியுள்ளது.

எனவே, இசைப்பிரியாவின் குடும்பத்தினருக்கும் தமிழ் மக்களுககும் நீதி கிடைக்க வேண்டும். இதிலிருந்து அரசு தப்பவே முடியாது என்றும் அவர் கூறினார். (அ-2)

# பேருந்து கட்டண விபரத்தை காட்சிப்படுத்துவது அவசியம்

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்து வண்டிகளில் புதிய கட்டண விபரங்களை காட்சிப்படுத்தாத சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென வடமாகாண கூட்டிணைக்கப் பெற்ற பேருந்து கம்பனிகளின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

பேருந்து கட்டணம் அதிகரிக்கப் பட்டுள்ள நிலையில் கட்டண விபரத்தை பேருந்தின் மிதிபலகைக்கு அருகில் காட்சிப்படுத்த வேண்டுமென வும் அவர் கூறினார்.

தீர்மானிக்க கட்டணத்திற்கு அதிகமாக கட்டணங்களை அறவிடும் நடத்துநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென கூறிய அவர் அதில் பயணிக்கும் பயணிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தவறுகள் ஏதும் இடம் பெற்றால் வடமாகாண கூட்டிணைக் கப் பெற்ற பேருந்து கம்பனிகளின் இணை யத்திற்கு முறைப்பாடு செய்வதன்மூலம் தனியார் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அதுபற்றி தெரிவித்து குறித்த சாரதி மற்றும் நடத்துநருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார். (அ-6)

# போக்குவரத்து சேவையில் மாணவர்களுக்கு விசேட சலுகை

## தனியார் பே.ச.தெரிவிப்பு

(மன்னார்)

எதிர்வரும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகையுடனான போக்குவரத்து சேவையை வழங்கவுள்ளதாக வடமாகாண தனியார் பேருந்து சங்கங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மன்னார் நகர சபை ஒன்று கூடல் மண்டபத்தில் மேற்படி கட்டண உயர்வு சம்பந்தமாக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன் அழைப்பின் பேரில் வட மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விசேட ஒன்று கூடல் நடைபெற்றது.

மன்னார், வவுனியா மற்றும் பருத்தித்துறை, வடமராட்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திப்பில் பங்குபற்றியிருந்தனர்.

இதன் போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் இம்மாதம் முதலாம் திகதி முதல் 7 வீத கட்டண உயர்வை செயற்படுத்துவது தொடர்பிலான இந்த விசேட சந்திப்பில் எதிர்காலத்தில் வடமாகாண சபையின் போக்குவரத்து ஒழுங்குகள்பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டன.

அத்தோடு கட்டண உயர்வானது தற்போதைய எரிபொருள் விலை உயர்வுகளின் அடிப்படையில் சரியானதா? இதனால் மக்கள் பாதிப்படைவார்களா? என்பது தொடர்பிலும் கலந்தாலோசித்து கட்டண உயர்வு கடந்த ஞாயிறு முதல் அமுலாக்கப் பட்டது.

அத்தோடு எதிர்வரும் ஆண்டில் இருந்து பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை மூலம் சேவைகளை வழங்க தனியார் பேருந்து சங்கங்கள் முன்வர வேண்டுமென்ற யோசனையும் அமைச்சர் முன்வைத்தார். (அ-4)

# நாகவிகாரையில் மகா புனித நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாக விகாரையின் கட்ரிண மகா புனித நிகழ்வு எதிர்வரும் 14 ,15 ஆம் திகதிகளில் விகாரை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல்வேறு சமய நிகழ்வுகளும் பெரஹரா நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (அ-5)



வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலைய ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-சித்தங்கேணி செய்தியாளர்)

# புரட்டாதி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

நீங்கள் சுறுசுறுப்பான சுகஜீவிகள்! காலத்தை வீணாக்காமல், காரியங்களைச் செய்து வெற்றியடைய முயன்று முன்னேற்றமடைவீர்கள். பெரிய காரியங்களைக் கூட சிறிதளவு பிரயாசையால் முடித்து விடும் புத்திக் கூர்மையுடன் விளங்குவீர்கள்.

உங்களில் சிலருக்கு மூலதனமில்லாமல் கூடப் பெருந்தனவந்தராகத்தக்க வாக்குச் சாதுரியமும் பிறரை நம்பவைக்கும் தன்மையும் அமைந்திருக்குமாகையால் அத்தகையவர்கள் நாணயமான வர்த்தகத்தில் நல்ல ஆதாயமடைவார்கள். கலைத்துறையிலும் உங்களில் சிலர் புகழுடனும் பெருஞ் செல்வத்துடனும் வாழ்வீர்கள்.

வாய்ப்பும் செல்வமும் உங்களைத் தானாக தேடிவரும். நிலத்தரகு, கமிஷன், ஏஜென்சி, அரசியல், தேசத் தூதுவம் முதலிய துறைகள் உங்களுக்குச் சாதகமாக அமையும்.

உங்களுக்கு நண்பர்களாக வாய்ப்போரில் மிகப் பலர் உங்களது முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவார்கள். ஆகவே வாழ்வில் மனப் போர்கள், எதிர்ப்புகள் அவ்வப்போது தோன்றிக் கொண்டேயிருக்கும். உங்களுக்குத் தொழில் துறையில் பின்னதாக நடக்கப்போவதை முன்னதாகவே அறிந்து கொள்ளும் உள்ளுணர்வு ரீதியான அபூர்வ ஆற்றல் அமைந்திருக்கும்.

சிலர் கபட நாடக சூத்திரதாரிகளாகவும் சஞ்சரிப்பார்கள்.

நீங்கள் எதையும் எளிதில் கற்றுத் தேர்ச்சி பெற்று பாண்டித்தியம் அடைவீர்கள். மிகப் பெரிய தத்துவ நூல்களையும் வேதாந்த சித்தாந்த நூல்களையும் மிக விரைவில் கற்றுத் தேர்ச்சி அடைவீர்கள். கல்வி கற்பதில் உங்களுக்கு ஆர்வம் அதிகம் ஏற்படும்.

சிறு வயதிலேயே கல்வியில் சுட்டிகையாகத் திகழ்வீர்கள். திறமையாகப் பேசுவதிலும் தர்க்கம் செய்வதிலும் நீங்கள் வல்லவர்கள், பிறவியிலுள்ள வேறு கிரக நிலைகளின் காரணமாகவோ, வளர்ப்பு முறை, சூழ்நிலைகளாலோ சிலருக்கு படிப்பில்லை என்றாலும் கூட படிக்காமலேயே மேதையாக திகழ்வோராகவும் அறிவியல் ரீதியான பட்டம் ஏதும் பெறாமல் புகழ்பெறும் அனுபவ விஞ்ஞானிகளாகவும் இருப்பது உண்டு.

பொதுவாக கல்லூரிகளிலும் தனிப்பட்ட கல்விக் கழகங்களிலும் பயின்று சிறப்புப் பட்டங்கள் பலவும் கீர்த்திகளும் பெற்றுத் திகழும் பட்டதாரிகள் பலரும் புரட்டாதி கன்னிக் காரர்களாகவே இருப்பார்கள்.

புத்தகங்கள் சேகரிப்பதிலும் நூல் நிலையம் அமைத்து அதைப் பேணிக் காப்பதிலும் அதிக அக்கறை உள்ளவர்கள். பொதுவில் நீங்கள் அதிக சிக்கனம் உடையவர்களாயினும் புத்தக நிலையம் அமைப்பதற்கு புதிய புதிய விடயங்களைச் சேகரிப்பதற்கும் கஷ்டப்பட்ட பணத்தை தாராளமாக செலவு செய்வீர்கள். உங்களில் சிலர் அந்நூல்களைப் படிப்பீர்களோ, படிக்க மாட்டீர்களோ. ஆனால் தன்னைச் சூழ்ந்து அடுக்கடுக்காக புத்தகங்களில் கோட்டை கட்டுவதைப் போல அலங்காரமாக வைத்துக் கொள்வதில் ஒரு வகையான மன மகிழ்ச்சி உண்டாகும்.

நீங்கள் எதையும் சிந்தித்த பின்னரே செயலாற்றுவீர்கள். எதையும் திறமையாக செய்து புகழ்பெற வேண்டும் என்று விரும்புவது உங்களுடைய இயற்கைக் குணமாக இருக்கும். எதையும் விரைவில் கற்றறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்திலும் எவ்வளவு பெரிய தத்துவச் சிக்கல்கள் நிறைந்த புத்தகத்தையும் ஒருமுறை கையில் எடுத்து அதன் பக்கங்களை விரைவில் புரட்டிப் பார்த்து விட்டு படித்து புரட்டியாச்சு என்றும் சொல்லி விடுவீர்கள்.

நீங்கள் புரட்டாதி மாதத்தில் பிறந்திருப்பதை புரட்டியாச்சு என்று சொல்வதற்குத் தானோ என்று சொல்லத் தோன்றும். நீங்கள் வெகுவிரைவில் வாழ்க்கையில் சுகபோக வாழ்வை அடைவீர்கள். பிறர் செய்யும் நன்மைகளை விட அவர்கள் செய்யும் குற்றங்களே உங்கள் பார்வையில் பளிச்சென்று பட்டு விடும். குற்றத்தைக் கண்ட இடத்திலேயே ஒளிவுமறைவில்லாமல் அதை எடுத்துக் கூறி குற்றஞ் செய்தவரை திருத்த முயல்வதும் உங்கள் பழக்கமாக இருக்கும். உங்களைப் பொறுத்தவரை சிறு தவறுகள் கூட பெரும்பாலும் நிகழாதவாறு நடந்து கொள்வீர்கள்.

உங்களைச் சார்ந்தோரின் முன்னேற்றத்தில் உங்களுக்கு அதிக அக்கறை ஏற்படும். ஆனால் சொந்த முன்னேற்றத்திற்காக எதைச் செய்யவும் சங்கோஜப்பட்டு விடுவீர்கள். குறுக்கு வழியினாலோ அல்லது பிறரைப் புகழ்ந்தோ உங்களது காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்ப மாட்டீர்கள்.

உங்களுக்கு இயற்கைக் காட்சிகளில் ரசனை அதிகம். சுவை மிகுந்த பொருட்களை மிகவும் விருப்பமாக அருந்துவீர்கள். பேச்சில் திறமையுடையவர்களாகவும் கலை, ஆர்வம் மிக்கவராகவும் இருப்பீர்கள்.

உங்களில் சிலருக்கு கற்பனைகளும் கருத்துக்களும் நிறைந்த தத்துவக் கவிதைகளை புனையும் ஆற்றலும் உண்டாகும்.

உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி, மூளை அதிர்ச்சி போன்ற வியாதிகள் அவ்வப்போது தோன்றும். தக்க ஓய்வும் உல்லாசப் பயணமும் தீர்த்த யாத்திரை ஷேத்திராடனம் ஆகியவற்றை அவ்வப்போது மேற்கொண்டால் நோய்களுக்குத் தடுப்பாக இருக்கும்.

சிலர் புத்தகப் பித்தர்களைப் போல் புத்தகங்களைப் படித்து படித்துப் பித்துப் பிடித்தவர்கள் போல் தோன்றினாலும் சொந்த வாழ்வில் சிறந்த புத்திசாலிகளாகவே இருப்பார்கள். சிலர் வாலிப வயதிலேயே மூக்குக் கண்ணாடியை அணிய நேரிடும்.

பத்திரிகைகள் எதுவாயினும் குறிப்பாக அன்றாட தினசரிப் பத்திரிகைகளைக் கூடத் தலைப்பிலிருந்து கடைசியில் அச்சிட்டு வெளியிட்டோரின் பெயர் வரை புரட்டிப் புரட்டிப் படித்துத்தான் கீழே வைப்பது புரட்டாதி மாதத்தில் பிறந்தவர்களின் இயல்பு குணமாகும்.

உங்களில் பலர் எதையும் புரட்டுவார்கள். சொற்பொழிவுகளை அக்கறையாகக் கேட்டு விமர்சனம் செய்வதிலும் நீங்கள் வல்லவர்கள். சமுதாயத்தில் ஏனைய மாதத்தில் பிறந்தவர்களை விட புரட்டாதி கன்னி மாதத்தில் பிறந்த நீங்கள் விரைவில் உயர்ந்த பதவிகளையும் அந்தஸ்தையும் அடைவீர்கள். நீங்கள் நட்பிற்கு உகந்தவர்கள்.

உங்களிடம் பல நல்ல அம்சங்கள் அமைந்திருக்கும். எத்தனை நயவஞ்சகர்களும் உங்களை எளிதில் ஏமாற்றி விட முடியாது. நயவஞ்சகர் என்று தெரிந்திருந்தாலும் அவர்களிடத்திலும் நீங்கள் நல்லவர்களாகவே நடப்பீர்கள். அவர்களிடமும் நீங்கள் உங்கள் காரியத்தை மிகத் தந்திரமாக சாதித்துக் கொண்டு விடுவீர்கள்! (தொடரும்)

## ஜோதிடக் களம்




கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் தீபாவளி விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறுவர்களின் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# இராணுவத் தேவைக்காக சங்கிலியன் பூங்காவை வழங்கப் போவதில்லை

## யாழ். மாநகர முதல்வர் உறுதிபடத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியங்களோடு பின்னிப்பிணைந்த சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணியை இராணுவத் தேவைகளுக்காக வழங்க முடியாது என யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்ததாக ஈ.பி.டி.பியின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிராம அலுவலர் பிரிவு ஜே/109 இல் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணியை இலங்கை பாதுகாப்புப் படையின் 27 ஆவது அணியின் சி குழுவினருக்கு பாரப்படுத்தும்படி பத்தரமுல்லையிலுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்திலிருந்து காணி ஆணையாளர், நல்லூர் பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

காணி ஆணையாளரின் பணிப்புரைக்கமைய நல்லூர் பிரதேச செயலாளர் குறித்த காணியை பாதுகாப்புப் படையினருக்கு வழங்குவது தொடர்பாக அண்மையில் யாழ். மாநகர சபையின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

அக்கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக முதல்வர் யோகேஸ்வரி எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணி யாழ். மாநகர சபையின் பராமரிப்பிலேயே உள்ளது. அப்பூங்காவை சங்கிலியன் பூங்கா என்ற பெயரில் 80 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கத்திட்டமிட்டுள்ளோம். அதற்கான திட்டமும் தயாரிக்கப்பட்டு பூர்வாங்க பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் திட்ட வட்டமாக அறிவித்துள்ளார்.

சங்கிலியன் பூங்கா சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் சிறந்த பொழுதுபோக்கு மையமாக புனரமைக்கப்பட வேண்டுமென்பதே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாத்தறை மோதல் குறித்து ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஐக்கிய தேசியக் கட்சி மனித உரிமை ஆணைக்குழுவில் பதினொரு முறைப்பாடுகளை செய்துள்ளது.

மாத்தறை மோதல் சம்பவம் தொடர்பில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் 11 பேரினதும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 5 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நடத்தப்பட்ட பேரணியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தே மாத்தறை பொலிஸார் 11 பேரை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இந்தக் கைதுகள் தொடர்பில் நீதிமன்றின் உதவியை தான் நாட உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளதோடு சம்பவத்துடன் தொடர்புபடாதவர்களை மாத்தறை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகவும் குற்றம சுமத்தியுள்ளார்.

இவ்வாறு அப்பாவிகளை கைது செய்து தடுத்து வைத்திருப்பதனால் அவர்களது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## தொண்டராசிரியர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (அ-2)

## இவ்வருடத்தில் ஒருமில்லியன் மரக்கன்றுகள்

(கொழும்பு)

இந்த வருடம் ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக அரச நிறுவனங்கள் பலவற்றின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஈ.எம்.யூ.டி. பஸ்நாயக்க தெரிவித்தார்.

பாடசாலைகள், சிறைச்சாலைகள், பாதுகாப்பு பிரிவு, பொலிஸார், பிரதேச, மாகாண சபைகள் என அனைத்துடனும் இணைந்து தேசிய திட்டமாக இதனை முன்னெடுப்பதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் இவ்வாண்டு 7 பில். ரூபா கிடைக்கும்

## அமைச்சர் டிலான் நம்பிக்கை

**(கொழும்பு)**

**வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் கடந்த வருடம் 6.1 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்ட போதிலும் இந்த வருடம் 7 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையம் ஏற்பாடுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நடவடிக்கை தொடர்பான பாடநெறியைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர்,

வருடாந்தம் இலங்கையிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தொழில்வாய்ப்பு பெற்று



வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். வெளிநாட்டுக்குத் தொழில் பெற்றுச் செல்லும் பெண்களின் தொகை 12 வீதத்தினால் குறைந்துள்ள அதேவேளை, ஆண்களின் தொகை 18 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் மொத்த சனத்தொகையில் 215 மில்லியன் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதில் 1.6 மில்லியன் பேர் இலங்கையராகும். வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மூலம் 450 பில்லியன் ரூபா வருமானம் பெறப்படுகிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பினூடாக 7 பில்லியன் ரூபா ஈட்டுகிறது.

ஆடைத்தொழிற்சாலை மூலம் வருடாந்தம் 4 பில்லியன் ரூபா வருமானம் கிடைப்பதோடு, சுற்றுலாதுறைமூலம் 1.5 பில்லியன் ரூபாவும் கிடைக்கிறது. மொத்தத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலமே கூடுதல் வருமானம் ஈட்டப்படுகிறது.

கடந்த காலத்தில் இலங்கையிலிருந்து பெண்களே கூடுதலாக வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்றனர்.

கடந்த 9 மாத காலத்தில் வெளிநாட்டிற்கு பெண்கள் செல்லும் தொகை 12 வீதத்தினால் குறைந்துள்ளது. ஆண்கள் செல்லும் தொகை 18 வீதமாக அதிகரித்துள்ளது.

இருந்தாலும் வெளிநாடு செல்லும் மொத்த தொகை கூடியுள்ளது. பணிப்பெண்களாக பெண்கள் செல்லும் தொகையை மட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை வெற்றியளித்து வருகிறது. பணிப்பெண்களுக்குப் பதிலாக பல்வேறு துறைகளிலும் பயிற்றப்பட்ட பெண்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வருகிறோம் என்றார். (அ-2)

## தனியார் பேருந்து சேவை குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க ஸ்கைப்

(கொழும்பு)

தனியார் பேருந்து சேவை தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்காக “ஸ்கைப” தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறு தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் ஜீ. பீ. ரத்னாயக்க அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளுடன் இணைந்து கூட்டாக இதனை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. தனியார் பேருந்து தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள், அவை தொடர்பில் வழங்கப்படும் தீர்வு என்பன குறித்து உடனுக்குடன் அறியவும் அது தொடர்பில் தரவுகளை திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயணிகளுக்கும் ஸ்கைப் ஊடாக முறையிட அவகாசம் வழங்கப்பட உள்ளதோடு, மின்னஞ்சல் மூலமும் முறையிட வாய்ப்பு வழங்கப்படும்.

கூடுதல் கட்டணம் அறவிடல், பேருந்து ஊழியர்களினால் பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகள், உரிய நேரத்துக்கு பேருந்து பயணிக்காமை போன்ற விடயங்கள் குறித்து அதிக முறைப்பாடுகள் கிடைப்பதால் அவை தொடர்பில் துரித தீர்வு காணும் வகையில் இந்த புதிய நடைமுறையை ஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்க இதனூடாக திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

## பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்பது மகா தவறு


### மதுரை ஆதீனம் சுட்டிக்காட்டு

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என மத்திய அரசுக்கு மதுரை ஆதீனம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

இனப்படுகொலை நடைபெற்ற இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த வேண்டும் என முடிவு செய்ததே மிகப்பெரிய தவறு. அத்தகைய முடிவுக்கு இந்தியா சம்மதம் தெரிவித்திருக்கக் கூடாது. இலட்சக்கணககான மனிதர்களை கொன்று குவித்ததோடு, பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும் அழித்து மனிதாபிமானத்திற்கு வேட்டு வைத்த இலங்கையில், குறித்த மாநாட்டை எப்படி நடத்தமுடியும்?

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகனை ஈவு இரக்கமின்றி கொலை செய்தது மட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்த இசைப்பிரியாவை மிகப்பயங்கரமாக கொலை செய்து விட்டு, தாங்கள் அக்கொலையை செய்யவில்லை என பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளும் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தலாமா? **பொதுநலவாயம்** என்ற சொல்லுக்கு பொது சொத்து என்று பொருள். பொதுச்சொத்துக்களான மனித உயிர்களை நாசமாக்கிய இலங்கையில் இம் மாநாடு நடைபெற அனுமதிக்கலாமா? மத்திய அரசே! இலங்கையின் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று அக்கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேசசபையினால் நடமாடும் ஆயுர்வேத மருத்துவ முகாம் அண்மையில் மெலிஞ்சிமுனை இருதயராசா சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற போது...

## இளைஞர் மாநாடு 10 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றும் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள், வெளிநாட்டு செயலாளர்கள் அடங்கலான உயரதிகாரிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருகை தர இருப்பதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

அத்துடன் 11 ஆம் திகதி முதல் வெளிநாட்டு அமைச்சர்கள் இங்கு வருகை தருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுடன் இணைந்ததாக நடைபெறும் இளைஞர் மாநாடு 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை நகரில் நடைபெறவுள்ளது.

வர்த்தக மாநாடு 12 முதல் 17 ஆம் திகதி வரை சினமன் ஹோட்டலில் நடத்த ஏற்பாடாகியுள்ளதோடு, பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு 13 , 14 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது.

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. மாநாட்டில் பங்குபற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள் 14 ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருகை தருவார்கள் என பொதுநலவாய மாநாட்டின் பேச்சாளர் அனுராதா ஹேரத் கூறினார்.

வெளிநாட்டு உயரதிகாரிகள் , அமைச்சர்கள்மற்றும்தலைவர்களை வரவேற்க விசேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-2)

## சிகிரியாவை அண்மித்த பகுதிகள் அபிவிருத்தி

(கொழும்பு)

சிகிரியாவை அண்மித்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிடுகின்றது.

மத்திய கலாசார நிதியத்துடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் அனில் பீரிஸ் தெரிவித்தார்.

இதற்கமைய, சிகிரியாவை அண்மித்த பகுதிகளை சுத்தப்படுத்தும் மற்றும் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் பாறைகள் தொடர்பில் கண்டறிதல், பெறுமதியான ஓவியங்களை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளும் இதனூடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கார். (அ-2)

## ஊடக சுதந்திரமில்லை; கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு மோசமான நாடாக இலங்கை மாற்றமடைந்து செல்வதாக தேர்தல் கண்காணிப்பு (கபே) அமைப்பு தெரிவித்துள்ளது.


ஊடக சுதந்திரம் குறித்த பல்வேறு சுட்டெண்களில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக பல்வேறு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருவதாகவும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமான முறையில் கடமையாற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் அவுஸ்திரேலிய ஊடகவியலாளர்கள் நாடு கடத்தப்பட்ட சம்பவம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இலங்கை அரசியல் சாசனத்தின் 14ஆம் சரத்திற்கு புறம்பான வகையில் ஊடகவியலாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மேன்மையான உறவு நீடிப்பது எப்படி?



ஆன்மீகம் 29

இது ஒரு மிகவும் கஷ்டமான ஒரு கேள்விதான். மனைவியுடன் சுமுகமான உறவு எப்போதும் வேண்டுமென விரும்பினால், முதலில் அவரை உங்களுடைய மனைவி என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதை நிறுத்துங்கள். அவரை இன்னொரு மனித உயிராகப் பாருங்கள். இப்படிப் பார்த்தால் பிறகு அங்கே எந்தப் பிரச்சினையும் இருக்காது.

இவள் என் மனைவி என்று நீங்கள் பார்க்கத் துவங்கும் கணத்திலேயே எங்கோ அவள் உங்களின் சொத்து என்றாகிவிடுகிறது. உங்களுக்குச் சொந்தமான சொத்து என்றவுடனேயே உங்களது அணுகுமுறை முற்றிலும் வேறுவிதமாக ஆகிவிடுகிறது.

ஒருவரை நீங்கள் உங்களுடைய உரிமைப் பொருளாக்க் குறைத்துவிடும் கணத்திலேயே அவருடன் இணைந்து வாழ்வதில் உள்ள அழகு மறைந்துவிடுகிறது. வேறு யாரோ ஒருவருக்கு அவள் அற்புதமானவளாகத் தெரியலாம். ஆனால், உங்கள் கண்களுக்கு வேறுவிதமாகத்தான் தெரிவாள். அவளை உங்களுடைய உரிமையாகப் பார்க்கும் காரணத்தால் அவருடைய அற்புதத்தன்மை உங்களுக்குத் தெரிவதில்லை. உண்மையில் யாரையும் நீங்கள் உரிமை கொண்டாட முடியாது. உங்களுடைய மனைவியோ, உங்கள் கணவரோ, உங்கள் குழந்தையோ யாருமே உங்களுக்கு உரிமையானவர் கிடையாது. அவர்கள் உங்கள் சொத்து கிடையாது. இந்த நிமடத்தில் அவர்கள் உங்களோடு இணைந்திருப்பதைக் கொண்டாடி மகிழுங்கள்.

இந்த உயிர் என்னோடு இருப்பதைத் தேர்வு செய்திருப்பது எவ்வளவு அற்புதமான விடயம் என்று நீங்கள் மனமார உணர்ந்தால் மட்டுமே கொண்டாடும் தன்மை உங்களுக்கு வரும். மாறாக, இவள் என் மனைவி. எப்படியும் எனக்கு உடமையானவள்தான்.



என்னிடம் மட்டுமே இருக்க வேண்டியவள் என்று நீங்கள் நினைக்கும் அந்தக் கணத்திலேயே பாராட்டும், கொண்டாடுதலும் காணாமல் போய்விடும். இரண்டு உயிர்களுக்கிடையே பாராட்டும், கொண்டாட்டமும் காணாமல் போனபின்னர், அவர்களிடையே இருக்கக் கூடிய உறவு நிலையில் என்னதான் அழகு இருந்துவிட முடியும்? கணவரோ அல்லது மனைவியோ எந்தத் தன்மையுடன் இருக்கிறாரோ அவரை அந்தத் தன்மையுடனேயே புரிந்துகொண்டு மதிக்கவும் கொண்டாடவும் முடியவில்லையென்றால் பிறகு அருமையான உறவுமுறை அங்கே எப்படியிருக்கும்?

ஆனால், அதேநேரத்தில், அவரை இன்னொரு உயிராக நீங்கள் உணர்ந்தால் அங்கே மிக அழகான உறவு மலரும். உங்களுடைய வாழக்கைக்குள் பங்கெடுக்க வந்த பெண்ணை, இதோ, இங்கே, இப்போது என்னருகில் இருப்பது இன்னொரு சக உயிர் என்ற அளவில் வெறுமனே பாருங்கள். ஒவ்வொரு கணமும் இப்படிப் பார்க்கும் போது அங்கு கொண்டாட்டம் மட்டுமே இருக்க முடியும்.

அவளுக்கு வேறு வழியே கிடையாது என்கிற ஒரு சூழலை சமூக ரீதியாக நீங்கள் உருவாக்க முயற்சிக்கலாம். ஆனால், அவளுக்கும் சில வழிகள் இருக்கிறது.

எதுவுமே செய்ய முடியாத நிலையில் சிலர் தன்னை மாய்த்துக்கொண்டாவது கணவனுக்கான உரிமைகளை மறுத்திருக்கிறரர்கள், இல்லையா?

எனவே, தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். யாரோ ஒருவர் சமூக ரீதியாக உங்களோடு பிணைக்கப் பட்டிருந்தாலும் அவர் தன் விருப்பத்தின் பேரில்தான் உங்களோடு தொடர்ந்து இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே, அவரின் விருப்பத்திற்கு நன்றி கூறி அவரையும் அவரது அருகாமையையும் மகத்தானதாகக் கொண்டாடுங்கள்.

இப்படி உறவை மதிக்கவும் கொண்டாடவும் தெரிந்திருந்தால் அங்கே மேன்மையான உறவு மட்டுமே இருக்க முடியும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இளம் வயதில் எகிப்திய சக்கரவர்த்தி எப்படி இறந்தார்? துலங்கியது மர்மம்



அவரது தங்க நாற்காலி

பிரிட்டனின் சேனல்-4 தொலைக்காட்சியில் வெளியான டாக்குமெண்டரி, உலகப் புகழ் பெற்ற எகிப்திய மம்மி (இறந்தவர்களின் உடலை நூற்றாண்டுகளாக கெடாமல் வைத்திருப்பது) பற்றிய சுவரஸ்யமான தகவல்களைக் கொண்டது. கி.மு.1323 ஆம் ஆண்டு மரணமடைந்த எகிப்திய சக்கரவர்த்தி Tutankhamun என்பவரின் உடல், தொடர்பான டாக்குமெண்டலிதான் அது.

உலகப் புகழ்பெற்றிருந்த எகிப்திய சாம்ராஜ்யத்தின் முகம்

கி.மு.1333 ஆம் ஆண்டு தமது 10-வது வயதில் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்ட Tutankhamun 9 ஆண்டுகள் ஆட்சி செய்த நிலையில், தனது 19ஆவது வயதில் உயிரிழந்தார். அந்த இளம் வயதில் அவர் உயிரிழந்தது எப்படி என்பது நீண்டகாலம் மர்மமாகவே இருந்தது. தற்போது தொழில்நுட்பத்தின் உதவியுடன் கண்டுபிடித்துள்ளார்கள்.


தரையடியே பாதுகாப்பான இடத்தில் தங்கப் பேழையில் வைக்கப்பட்ட சக்கரவர்த்தியின் உடல், 1922 ஆம் ஆண்டு ஹவார்ட் கார்ட்டர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்போது இருந்த தொழில்நுட்ப திறனால், அந்த உடலில் இருந்து அதிக தகவல்களை அறிய முடியவில்லை.

ஆனால், இப்போது தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டதில் மீண்டும் சக்கரவர்த்தியின் உடல் ஆராயப்பட்டு முக்கிய விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று சக்கரவர்த்தியின் உடல் ஸ்கேனிங் செய்யப்பட்டதில் அவர் எப்படி இறந்திருக்கலாம் என்ற சாத்தியம் தெரியவந்துள்ளது.

அதிவேகமாக ஓடிய ரதம் ஒன்றில் இருந்து தவறி விழுந்த நிலையில் மரணம் சம்பவித்திருக்கலாம்-யுத்தம் ஒன்றில் இவர் இறந்திருக்கலாம்-யுத்தத்தில் மிக வேகமாக ரதத்தில் சென்றபோது, ரதத்தில் இருந்து தவறி விழுந்திருக்கலாம். அதையடுத்து ரதத்தின் சக்கரங்களில் சிக்கி, சின்னாபின்னமாகி உயிரை விட்டிருக்கலாம் ஏனென்றால், இவரது விலா எலும்புகள் உடைந்துள்ளன. வேறு சில எலும்புகளை காணவில்லை. இடது கை மணிக்கட்டுடன் உடைந்துள்ளது. இடது இடுப்பு எலும்பும் உடைந்துள்ளது. அதனால் ரதத்தின் சக்கரம் உடலில் ஏறியிருக்கவே சாத்தியம் அதிகமாக உள்ளது என்பதே அதன் சாத்தியம்.

சக்கரவர்த்தியின் மம்மி பற்றிய சில சுவாரசியமான விடயங்களைப் பார்க்கலாம்.





இவர் இளம் வயதில் உயிரிழந்தபின் எகிப்திய சாம்ராஜ்யத்தில் நீண்டகாலம் துக்கம் அனுஷ்டித்திருக்கிறார்கள். உடல்கள் கெட்டுப் போகாமல் வைத்திருக்கும் கலையில் வல்லவர்களாக இருந்த காரணத்தினால் மன்னரின் உடலையும் அப்படியே பக்குவம் செய்து வைத்திருக்கிறார்கள்.

அவரது உடலின் அளவுக்கு தங்கப்பேழை ஒன்று தயாரிக்கப்பட்டது. உடல் பதப்படுத்தப்பட்டு, பட்டுதுணியில் சுற்றப்பட்டு, பேழையில் வைக்கப்பட்டது. அவரது முகத்தின்மேல் அவரது முகம் போலவே தங்கத்தால் செய்யப்பட்ட முகமூடி வைக்கப்பட்டது. இந்த முகமூடியின் எடை, 24.1பவுண்ட். அத்தனையும் சொக்கத் தங்கம்.

தங்கப் பேழை, மற்றொரு மரப்பெட்டிக்குள் வைக்கப்பட்டு, நிலத்தடி அறை ஒன்றில் வைக்கப்பட்டது. அதற்குப் பக்கத்து அறையில் அவரது தங்க நாற்காலி உட்பட அவர் பயன்படுத்திய பொருட்கள் வைக்கப்பட்டன. இவற்றில், அவர் பயன்படுத்திய ரதத்தின் பகுதிகள், சிறுவயதில் விளையாடிய கேம் போர்ட், பயன்படுத்திய ஆயுதங்கள், அணிந்த நகைகள் அனைத்தும் அடங்கும்.

தங்க முகமூடி அணிந்த சக்கரவர்த்தியின் உடலும் அவரது பொருட்களும் தரையடியே பத்திரப்படுத்தப்பட்டு சுமார் 3,299 ஆண்டுகளின் பின், 1976 ஆம் ஆண்டு கோடை காலத்தில் அவரது உடலில் இருந்த தங்க முகமூடி, மற்றும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அமெரிக்காவுக்கு பயணமாகின.

Treasures of Tutankhamun என்ற கண்காட்சியை நடத்துவதற்காக அமெரிக்க அரசு, எகிப்திய அரசிடம் அனுமதி கோரியிருந்து. அதிலும் ஒரு சுவாரசியமான விடயம் உண்டு. இந்த பொருட்கள் விமானத்தில் கொண்டு செல்லப்பட இருந்தது. ஆனால், கடைசி நிமிடத்தில் எகிப்திய அரசு, அனுமதி மறுத்தது.

அதற்கு கூறப்பட்ட காரணம், இந்தப் பொக்கிஷங்களை எடுத்துச் செல்லும் உங்கள் விமானம் கடத்தப்பட்லாம். அல்லது விபத்துக்குள்ளாகலாம். அந்த ரிஸ்க்கை எடுக்க நாம் தயாராக இல்லை. இதையடுத்து இந்தப் பொருட்களை அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பல் யு.எஸ்.எஸ். சில்வானியா எகிப்துக்கு அனுப்பப்பட்டது. அதில் இந்த பொருட்கள் ஏற்றப்பட்டு பலத்த பாதுகாப்புடனும் இரகசியத்துட னும் அமெரிக்காவின் வெர்ஜினியா, நோஃபோர்க் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன.

1976 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இருந்து 1979 ஆம் ஆண்டின் தொடக்கம் வரை அமெரிக்காவில் வெவ்வேறு நகரங்களில் இந்தப் பொருட்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டன. அமெரிக்காவில் ஏற்பட்ட 20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய கலாச் சார மயக்கம் என இந்த கண்காட்சிகள் வர்ணிக்கப்பட்டன.

இந்தக் கண்காட்சியைப் பார்க்க அமெரிக்கர்கள் நீண்ட வரிசைகளில் மணிக்கணக்கில் காத்திருந்தார்கள்.

அமெரிக்காவில் இந்தக் கண்காட்சியை பார்த்தவர்களின் எண்ணிக்கை, 8 மில்லியன் பேர். அதாவது அவரது மொத்த குடிமக்களின் எண்ணிக்கையை விட அவர் பயன்படுத்திய பொருட்களைப் பார்க்க திரண்ட அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகமானது.

இந்த இளம் சக்கரவர்த்தி இருந்த காலத்தில் போட்டோக்கள் எடுக்கும் வசதி கிடையாது. ஆனால், அவரது உருவத்தை அப்படியே வரைந்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.



ஹவார்ட் கார்ட்டர்

-இணையம்-




# யார் பெரியவன்?

அந்த தோப்பில் மா, தென்னை, வேம்பு, பலா, தேக்கு, வாகை, பூவரசு எனப் பலவகையான மரங்கள் இருந்தன. எனினும் மாமரமும், தென்னையும் அவற்றுள் மிகுதியாகக் காணப்பட்டன.

வேலி அடைக்கப்படவில்லை. நான்கு புறங்களும் திறந்தே கிடந்தன. யார் யாரோ வளர்க்கும் ஆடுமாடுகள் வரும். புல்லை மேயும். சென்றுவிடும். அங்கே, கிளி, சிட்டு, காகம் போன்ற பறவைகளும் குரங்கு, மான் போன்ற விலங்குகளும் ஓணான், உடும்பு, அணில் போன்ற சிற்றுயிர்களும் ஏராளமாக வாழ்ந்து வந்தன.

படர்ந்து கிளை பரப்பி நின்ற மாமரத்தின் அருகில் நின்றிருந்த தென்னை மரத்திற்கு, அன்றைக்கு என்ன வந்ததோ தெரியவில்லை. சற்று வாய்கொழுப்புடன் பேசிக் கொண்டிருந்தது.


"இதோ பார்...உன்னை விட நானே உயர்ந்தவன்!" என்று தலையை உலுக்கிக் சொன்னது.

"யாராவது எதையாவது சொல்லி விட்டுப் போகட்டுமே நமக்கென்ன போச்சு..." என்று மாமரம் வாயை மூடிக கொண்டு சும்மா கிடக்கவில்லை. வலுச் சண்டைக்குப் போகக் கூடாது. வந்த சண்டையை விடக்கூடாது என்பது அதன் கொள்கை.

"நான்தான் உன்னைவிட உயர்ந்தவன்" என்றது மாமரம்.

"என்னுடைய உயரம் என்ன? உன்னுடைய உயரம் என்ன? பார்த்தாலே தெரியுமே! உனக்குக் கண் இல்லை. அதனால் தெரியவில்லை!" என்று மீண்டும் தென்னை மரம் குரல் உயர்த்தியது.

"நோஞ்சானைப்போல் ஒல்லியாக உயர்ந்து நின றால் மட்டும் போதுமா?



என்னைப் போல் நூற்றுக்கணக்கில் கிளை பரப்பி இலை தழைகளோடு காய்கனிகளைத் தாங்கி நிற்க வேண்டாமா?" என்று தென்னையின் மூக்கறுப்பது போல் கூறியது மாமரம்.

"நானும்தான் இளநீர்க் குலைகளைக் சுமந்திருக்கிறேன். ஆண்டு முழுவதும் தேங்காய்களைக் கொடுப்பவன் நான். நீ ஆண்டில் சில மாதங்களே மாங்காய்களைக் கொடுக்கிறாய். உன்னைவிட நானே உயர்ந்தவன்!" என்றது தென்னை.

"நான் வெயிலில் களைத்து வருவோர்க்கு நிழல் கொடுப்பேன். உன்னால் முடியாது. அது மட்டுமா? முக்கனிகளுள் ஒன்றாக என்னைத்தான் வைத்துள்ளனர்!" என்று மாமரம விடாமல் பதிலுக்குப் பதில் பேசியது.

"உன்னால் நிழல்தான கொடுக்க முடியும். குடியிருக்கும் வீடுகளுக்குக் கூரையாக அமைந்து வெயில், மழை, காற்றிலிருந்து மக்களைக் காப்பேன். அது மட்டுமோ? இறைவனை வழிபட என் தேங்காய்களைத்தான் பயன்படுத்து கின்றனர். முக்கனி என உன்னைச் சொல்வதற்காகப் பீற்றிக் கொள்ளாதே!" எனத் தென்னை சொல்லிவிட்டு வானத்தை, அண்ணாந்து பார்த்தது.

அந்த நேரத்தில் எங்கிருந்தோ வந்த ஒருவன், தென்னை மரத்தில் விடுவிடுவென வேகமாக ஏறினான். அதன் கழுத்துப் பகுதியில் தொங்கிக் கொண்டிருந்த தேங்காய்க் குலைகள் அனைத்தையும் வெட்டிச் சாய்த்துவிட்டுக் கீழே இறக்கினான். சிதறிக் கிடந்த தேங் காய்களையெல்லாம் பொறுக்கி எடுத்து ஒரு கோணிப்பையில் போட்டுக் கட்டினான்.

அதைக் கண்ட மாமரத்திற்குத் தாங்கமுடியாத மகிழ்ச்சி. இனிமேலாவது தென்னை மரத்தின் கொழுப்பு அடங்கும் என, எண்ணி எகத்தாளமாய்த தென்னையை அண்ணாந்து பார்த்தது. தென்னைக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே நின்றிருந்தது. கீழே பார்க்கவில்லை.

சற்றுநேரம் மாமரத்தின் நிழலில் இளைப்பாறிய அந்த மனிதன் களைப்பு நீங்கி எழுந்தான். எழுந்த வேகத்தில் மாமரத்தில் ஏறினான். ஒரு கிளை விடாமல் அத்தனை கிளைகளுக்கும் தாவி, அங்கே கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்த மாங்காய்களைப் பறித்துப் போட்டுவிட்டுக் கீழே இறங்கினரன்.

எல்லா மாங்காய்களையும் பொறுக்கினான். இரண்டு கோணிப்பை தேறியது. அதுவரை வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த தென்னை மரம், இப்போது மாமரத்தைப் பார்த்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டது.

நமக்கு வந்த துன்பம், பக்கத்து வீட்டுக் காரனுக்கும் வந்தால் ஒருவித ஆறுதல் கிடைக்குமே! அந்த ஆறுதல் தென்னைக்குக் கிடைத்தது. மாமரமோ சோகத்தில் மூழ்கிக் கிடந்தது.

அந்த மனிதன் இரண்டு மூட்டை மாங்காய்களையும், ஒரு மூட்டை தேங்காய்களையும் ஒரு கட்டை வண்டி யில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். அவன் புறப்பட்டுச் சென்றதைத் தென்னை மரமும், மாமரமும் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றன.

அப்போது கலகலவென சிரிப்பொலி கேட்டது. சிரிப்போலி வந்த திசையில் தென்னை மரமும், மாமரமும் பார்வையைச் செலுத்தின. எதிரே இருந்த பலா மரத்தில் கிடந்த பலாப்பழத்தைத் தின்று கொண்டிருந்த குரங்கு சிரித்தது என்பதை உணர்ந்து கொள்ள அவ்விரண்டிற்கும் அதிக நேரம் பிடிக்கவில்லை.

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1632-முப்பதாண்டுப் போரில் சுவீடனின் பேரரசன் குஸ்டாவஸ் அடொல்பஸ் கொல்லப்பட்டான்.
- 1759-பாளையக்காரர் பூலித் தேவரின் நெற்கட்டான் செவ்வலைக் கோட்டையை இசுபல்கான் கான் சாகிப் என்பவனின் படைகள் வெடிகுண்டுகள் கொண்டு தாக்கின. ஆனாலும், கோட்டையைப் பிடிக்க முடியவில்லை.
- 1844-டொமினிக்கன் குடியரசின் அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.
- 1860-ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16-வது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட முதலாவது ஜனாதிபதியாவார்.
- 1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்குத் தலைவரானார்.
- 1913- தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி இந்திய சுரங்கத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டார்.
- 1918-போலந்தில் இரண்டாவது போலந்து குடியரசு அமைக்கப்பட்டது.
- 1935-எட்வின் ஆம்ஸ்ரோங் பண்பலை ஒலிபரப்பு பற்றிய ஆய்வை வெளியிட்டார்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தனது முப்பதாண்டு கால பதவியில் இரண்டாவது தடவையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஜேர்மனியின் தாக்குதலில் 3 லட்சத்து 50 ஆயிரம் சோவியத் வீரர்கள் கொல்லப்பட்டிருந்தாலும் ஜேர்மனியர்கள் தமது 4.5 மில்லியன் பேரை இழந்திருப்பதாகவும் சோவியத் வெற்றி கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
- 1943- இந்தியாவின் வங்காளத்தில் நவகாளியில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக மகாத்மா காந்தி கல்கத்தாவில் இருந்து நவகாளி வந்து சேர்ந்தார்.
- 1943-இரண்டாம் உலகப்போர்: ரஷ்யா உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றினர். ஜேர்மனியினர் நகரை விட்டு விலகும் போது நகரின் பல பகுதிகளை சேதமாக்கினர்.
- 1944- புளுட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜப்பானில் கொழுத்த மனிதன் அணுகுண்டு போடுவதற்கு இது பயன்பட்டது.
- 1962-ஐ.நா. பொதுச்சபை தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.
- 1963-வியட்நாம் போர்: நவம்பர் 1 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து, இராணுவத் தலைவர் டோங் வான் மின் தெற்கு வியட்நாமின் ஜனாதிபதியானார்.
- 1965-ஐக்கிய அமெரிக்காவுக்கு குடியேற விரும்பிய கியூபா நாட்டினரை விமானம் மூலம் அங்கு கொண்டு செல்ல கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவும் உடன்பட்டன. இதன்படி 1971 இற்குள் 2 இலட்சத்து50 ஆயிரம் கியூபர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.-
- 1985- கொலம்பியாவில் இடதுசாரி தீவிரவாதிகள் நீதிக் கட்டத்ததைக் கைப்பற்றி 11 நீதிபதிகள் உட்பட 115 பேரைக் கொன்றனர்
- 1999-அவுஸ்திரேலியர்கள அனைத்து மக்கள் வாக்கெடுப்பு மூலம் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் தொடர்ந்திருக்க சம்மதம் தெரிவித்தனர்.

பிறப்பு

- 1861-ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளர் (இ.1939)

### ஜேம்ஸ் நெய்ஸ்மித்



_ாக்டர் ஜேம்ஜ் நெய்ஸ்மித் 1861 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி பிறந்தார். இவர் விளையாட்டு கல்வி ஆசிரியரும், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளரும், அமெரிக்க காற்பந்தாட்டத்தில் தலைக்கவசத்தை கண்டுபிடித்தவருமாவார்.

1891 இல் இவர் முதல் 13 கூடைப்பந்து சட்டங்களை கூறி யுள்ளார். இச்சட்டங்களில் 12 இன்று வரை ஏதாவது ஒருவிதத்தில் பயன் படுகின்றன.

1936 ஒலிம்பிக் போட்டிகளில் முன்முறையாக கூடைப்பந்து விளையாட்டு சேர்க்கப்பட்டது. 1898 இல் நெய்ஸ்மித் கேன்சஸ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகவும் முதலாவது கூடைப்பந்து பயிற்றுனராகவும் ஆனார்.

இவர் 1939 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி மரணமடைந்தார்.

## இணையத்தளங்கள் குறித்து அதிகமான முறைப்பாடுகள்

(கொழும்பு)

இவ்வாண்டு ஜனவரி மாதம் [illegible]டக்கம் இம்மாதம் முதல் [illegible]ரம் முடிவடைந்த காலப் பகுதியில் இணையத்தளம் மற்றும் அது சம்பந்தமான ஆயிரத்து 100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணனி தொடர்பான அவசர பதில் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இம் முறைப்பாடுகளில் அதிகளவான முறைப்பாடுகள் பேஸ்புக் சமூக வலைத்தளம் சம்பந்தமானவை என ஒன்றியத்தின் பேச்சாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்தார்.

அவற்றில் போலி பேஸ்புக் கணக்கு மற்றும் பேஸ்புக் கணக்குகளில் அனுமதியின்றி பிரவேசித்தமை தொடர்பான முறைப்பாடுகள் அடங்கும். [illegible]முறைப்பாடுகளின் அடிப்படை[illegible] சம்பந்தப்பட்ட போலி பேஸ்புக் கணக்குகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிறரின் பேஸ்புக் வலைத்தளம் கணக்குகளுக்கு செல்லும் சைபர் குற்றவாளிகள், அதன் மூலம் தவறான தகவல்களை வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. (அ-2)

## அநுராதபுரத்தில் ஐவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வீடொன்றிலிருந்து ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் ஹல்முல்ல எனும் பிரதேசத்தில் நேற்றுக் காலை இந்த சடலங்கள் மீட்கப்பட்டன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன், மகள், தாயின் சகோதரி, அவரது மகன் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர். இவர்களது உடல்களில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான கே.ஏ.பியதாஸ என்பவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# இராணுவத்தினர் சிவில் சமூகத்தை அசௌகரியப்படுத்தினால் நடவடிக்கை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**இராணுவத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி குற்றச் செயல்கள், கொள்ளைச் சம்பவங்கள், பாலியல் வல்லுறவுகளில் ஈடு படும் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்கள் தகுதி தராதரம் பாராது இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாரினால் கைது செய்யப்படும் இராணுவ வீரர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த இராணுவ பொலிஸாரின் உதவியும் வழங்கப்படும்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்கள் குற்றவாளிகளா இல்லையா என்று சிவில் நீதிமன்றம் அறிவிக்கும் வரை காத்திருக்காமல் அவர்களை உடனடியாக பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்து அவர்களுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்திலும் விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும்.


இதற்கான ஆலோசனைகள் இராணுவ சட்ட சேவை பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பெண் போன்று நிகாப் அணிந்து கண்டியில் வங்கி ஒன்றில் கொள்ளையிடச் சென்ற நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இராணுவ கப்டன் பணியில் இடைநிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஜாஎல பிரதேசத்தில் 75 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் உட்பட கொழும்பில் நடந்த பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரருக்கு எதிராக உடனடியாக இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளதுடன் அதுவரை அவரை பணியில் இருந்து இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூகத்தை அசௌகரியத்திற்கு உட்படுத்தி சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் இராணுவ உறுப்பினர்களுக்கு எதிராக தகுதி தராதரம் பாராது தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார். (அ-2)

# மக்ரேக்கு விசா வழங்குவதில் இந்தியா தொடர்ந்தும் இழுத்தடிப்பு



பிரித்தானியாவின் சனல்-4 ஊடகத்தின் பணிப்பாளர் கெல்லம் மக்ரேவிற்கு விசா வழங்க இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது. இலங்கை தொடர்பிலான சர்ச்சைக்குரிய காணொளிகளை மக்ரே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காணொளி ஒன்றை டில்லியில் காட்சிப்படுத்த திட்டமிட்டிருந்த போதிலும் இதுவரையில் விசா கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தினம் டில்லி செல்லத் திட்டமிட்டிருந்தேன். எட்டு மாதங்களுக்கு முன்னதாகவே விசாவிற்காக விண்ணப்பித்திருந்தேன். இலங்கைப் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் இந்தியாக கவனம் செலுத்தி வருகின்றமையை அறிவேன். இவ்வாறான ஓர் நிலையில், ஆதாரங்களையும் காணொளிகளையும் சமர்ப்பிக்க ஏன் இந்தியா சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்பது புரியவில்லை. லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்துடன் பலமுறை தொடர்பு கொண்டும், அங்குள்ள அதிகாரிகள் எந்தப் பதிலையும் தரவில்லை.

இதுதொடர்பாக, தாம் இந்தியத் தூதரகத்துக்கும், இந்திய உள்துறை அமைச்சுக்கு இரண்டு முறையும் மின்னஞ்சல் கடிதங்களை அனுப்பியுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அழுத்தத்தின் பேரில் தனக்கு நுழைவிசைவு வழங்க இந்தியா மறுத்திருக்காது என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்

இலங்கை தொடர்பான காணொளிகளை காட்சிப்படுத்த திட்டமிட்ட வகையில் இலங்கை அரசாங்கம் தடைகளை எற்படுத்தி வருவதாக மக்ரே தெரிவித்துள்ளார். (அ-2)

# மக்கள் மீது கடன் சுமையை அரசாங்கம் திணிக்கின்றது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் நாட்டை பாரியளவில் கடன் சுமையில் ஆழ்த்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது,

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு இந்த அரசாங்கம் பாரியளவு வட்டிக்கு கடன் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் பிறக்காத குழந்தைகளையும் அடகு வைத்து அரசாங்கம் கடன் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடன் மற்றும் வட்டித் தொகைகளை செலுத்த நாட்டின் மொத்த வருமானம் போதுமானதல்ல.

இந்த அரசாங்கத்திற்கு கடன் வழங்க உலக நாடுகள் தயாரில்லை.

இதனால் அரசாங்கம் வட்டிக்கு கடன் வாங்கி வருகின்றது.

அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதனால் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் மோசடிகள் இடம்பெறுகின்றன.

போரின் பின்னர் அரசாங்கம் மக்கள் மீது பாரியளவில் பொருளாதார சுமையை திணித்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் மொரீஷியஸ் பங்கேற்கும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர் மாநாட் டில் மொரீஷியஸ் பிரதமர் கலந்து கொள்வாரென அந்நாட்டு அரசாங்கம் உறுதி செய்துள்ளது.

பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவ பதவி அடுத்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை[illegible]த் தொடர்ந்து மொரீஷியஸ் [illegible]ட்டிற்கே சென்றடையவுள்ளது. இந்நிலையில் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டிற்கு மொரீஷியஸ் பூரண ஒத்துழைப்பை வழங்குமெனவும் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மொரீஷியசின் வெளிவிவகாரம், பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கான அமைச்சர் டாக்டர் அர்வின் பூவெல் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸை சந்தித்து இருதரப்பு பேச்சில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்ட உறுதி மொழிகளை வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பின் போது அமைச்சர் பீரிஸ், பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஏற்பாடுகள் மற்றும் அதன் தொனிப் பொருள் என்பன குறித்தும் விளக்கமளித்தார்.

மேலும் இலங்கையின் சூழல் மற்றும் சமுத்திர கற்கைகள் தொடர்பில் மொரீஷியஸ் வழங்கி வரும் ஒத்துழைப்பை பாராட்டிய அமைச்சர் பீரிஸ், இந்து சமுத்திர ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் இலங்கை அதிக ஆர்வம் செலுத்தி வருவதனையும் சுட்டிக்காட்டினார்.

சமுத்திர கற்கைகள் நிலையம் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை அண்மையில் கொழும்பில் நடாத்தப் படவுள்ளது. இதனூடாக இலங்கையின் முக்கிய பொருளாதாரமான சுற்றுலாத் துறையின் விழுமியங்கள் மற்றும் கலாசார பண்புகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

இந்து சமுத்திரத்தில் அங்கம் வகிக்கும் அநேகமான நாடுகள் இந்த நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்கு ஆர்வம் காட்டியுள்ளன. (அ-2)



காரைநகர் கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவ நாட்களில் தொடர் சொற்பொழிவை நிகழ்த்தியமைக்காக எஸ். உமாசுதனுக்கு செந்தமிழ் அறிஞன் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம்:- சித்தன்கேணி செய்தியாளர்)

# இராஜதந்திர அழுத்தங்களுக்குள் அகப்படாத ஈழத்தமிழ் மக்களின் நில அபகரிப்பு விவகாரம்!

கடந்தவாரம், தென்னிலங்கையிலுள்ள பெலியத்த என்கிற நகரில் விசேட நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

272 மில்லியன் டொலர் சீன நிதி உதவியில், பாரிய தொடரூந்து பாதை நிர்மாணிக்கும் திட்டம், சபாநாயகர் சமல் ராஜபக்சவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிக்கு பெருத்த மனதோடு உதவிவரும் சீனாவிற்கு, அங்கு புகழாரம் சூட்டப்பட்டது.

ஏற்கனவே, 292 மில்லியன் டொலர் சீனக்கடனில் நிர்மாணிக்கப்பட்ட நெடுஞ்சாலையை அண்மையில்தான் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

பொதுநலவாய மாநாட்டிற்கு வருகை தரும் பிரமுகர்கள் இந்தப் பாதையைப் பயன்படுத்துவார்கள் என்று வெளியுறவு அமைச்சகம் பெருமை கொள்கிறது.

ஆனால், பாதையை நிர்மாணிக்க சீனாவிடம் வாங்கிய கடனிற்கு மக்களின் வரிப் பணத்திலிருந்துதான் வட்டி செலுத்தப்படும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இதில் பெரும் 'சோகம் என்னவென்றால், அடுத்த ஆண்டிற்கான உத்தேச வரவு- செலவுத்திட்டத்தில் வடமாகாணத்திற்கு வெறும் 17 பில்லியன் ரூபாவும், கிழக்கு மாகாண சபைக்கு 15 பில்லியன் ரூபாவுமே அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, ஏறத்தாள 10 மடங்கு நிதி பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

2009இல் 1.2 பில்லியனையும், 2010இல் 821 மில்லியனையும், 2011ல் 784.7 மில்லியனையும் கடனாக இலங்கைக்கு வழங்கியிருக்கும் மக்கள் சீனக்குடியரசிற்கு- வட-கிழக்கு மாகாணசபைகளுக்கு இவ்வளவு குறைவான தொகையை அரசு ஏன் ஒதுக்கியுள்ளது என்பது குறித்தெல்லாம் கவலை கிடையாது. ஆனால், யுத்தம் நடைபெற்ற காலத்தில் மட்டும், வட- கிழக்கில் வீசப்படும் எறிகணைகளை யார் விநியோகிப்பது என்பதில், ஏனைய வல்லரசுகளோடு போட்டி போட்டது சீனா.

யுத்தத்திற்கு மட்டுமல்ல, நாட்டின் உட்கட்டுமான அபிவிருத்திக்கும் சீனாவின் நிதி உபயம் மிகப்பெரியது.

இருப்பினும் பாரிய 1.3 பில்லியன் சீனக்கடனில் கட்டி முடிக்கப்பட்ட நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையம், கடந்தவாரம் மீண்டும் தற்காலிகமாக தனது இயக்கத்தை நிறுத்திவிட்டதாக அமைச்சின் உத்தியோகபூர்வ செய்திகள் கூறின.

இதனைத் குறிப்பிட்டதன் நோக்கம் என்னவென்றால், அனேகமாக அடுத்தகட்டப் பணி ஆரம்பிப்பதற்கு முன்பாக, சீன நிறுவனமொன்று இதன் முழுமையான நிர்வாகத்தினை கையேற்கும் சம்பவம் நிகழ வாய்ப்புண்டு. என்பதைச் சுட்டிக்காட்டவே.

சீன மூலோபாய நகர்வின் அடுத்த கட்டமே அதுதான். தான் பெரியளவில் முதலிடு செய்த நிறுவனங்களை, அந்த நாடுகள் கையாள முடியாமல் தவிக்கும்போது, அதனை கையகப்படுத்துவதுதான் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலாகுமென எண்ணுகிறேன்.

ஏனெனில், இது ஆரம்பித்த நாளில் இருந்து இற்றைவரை பழுது பார்க்கவென்று மூடப்பட்ட நாட்கள்தான் அதிகம்.

இலங்கை மின்சாரசபையின் நட்டக்கணக்கில் (அமெரிக்காவுக்குத் தெரியாமல்!) இறக்குமதியாகும், ஈரான் எண்ணெய்க்கு அடுத்தபடியாக இருப்பது, இந்த லக்விஜயவால் வரும் நட்டந்தான்.

இதனையும் தாண்டி, 2015 இல் தலைக்குரிய வருமானத்தை 4000 ஆக உயர்த்த வேண்டுமாயின் இன்னும் பல படிகளை கடக்க வேண்டும் இலங்கை அரசு.


அதேவேளை, வரவு- செலவுத் திட்டத்தின் 47 சதவீதத்தை மூன்று சகோதரர்களின் அமைச்சுக்களுக்கும் பங்குபோட்டுக்கொண்டால் நாடு எப்படி முன்னேறும் என்று ஐக்கிய தேசியக்கட்சியினர் விமர்சிப்பது மக்களின் செவிகளில் விழுகிறது. இதனைப் பார்க்கும், கேட்கும் ஜனநாயக உரிமைக்கு மட்டும் குறைவில்லை. ஆனால், தட்டிக் கேட்கும் உரிமை எவருக்குமில்லை.

இடதுசாரிகளும் ஆட்சியில் இருப்பதால் அவர்கள் நடாத்தும் தொழிற் சங்கங்களும் இணைக்கப்பட்டு அரசியலுக்கு பழக்கப்பட்டுப் போய் விட்டன.

இவைதவிர, இவற்றிற்கு அப்பால் இன்னொரு முக்கிய விடயத்தை, மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரக் காற்றினை புதிதாக சுவாசிக்கும் வடமாகாணசபை ஆட்சியாளர்கள் கவனிக்க வேண்டும்.

அதாவது, அண்மையில் இராணுவ பேச்சாளர் ருவான் வணிக சூரிய நில அபகரிப்பு குறித்து தென்னிலங்கை நிலைமையோடு செய்த ஒப்பீடுதான் அந்த விவகாரமாகும்.

அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு தென்னிலங்கை மக்களின் நிலங்களை சுவீகரித்ததாகக் கூறும் வணிககூரிய, வடக்கில் நிலங்களைச் சுவீகரிப்பது இராணுவ படைத்தளங்களின் விரிவாக்கத்திற்கு என்கிறார்.



படைத்தளங்களை விரிவுபடுத்தினால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்துவிடுமென இராணுவப்பேச்சாளர் எண்ணிவிட்டதுபோல் தெரிகிறது. படை முகாம்களைக் கடந்து செல்லும் வாகனங்களிடம் கட்டணம் அறவிட்டு திறைசேரியின் கையிருப்பினை அதிகரிக்கலாமென்று எவராவது அறிவுரை வழங்கியிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இன ரீதியான ஒடுக்குமுறை நிஜம் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை.

தேசிய இன நல்லிணக்கம் நல்லாட்சி பற்றி சர்வதேச அரங்குகளில் போதிக்கும் அரசு, நடைமுறையில் அதற்கு நேர்மாறாக நடந்துகொள்வதையிட்டு இந்த வல்லாதிக்க நாடுகள் எவையும் பொருட்படுத்துவதில்லை.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் சிரானி பண்டாரநாயக்காவின் மனித உரிமை பற்றிப் பேசுவார்கள். ஆனால், குந்தியிருந்த நிலத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பூர்வீக இன மக்களின் பிறப்புரிமை குறித்து பேசவே மாட்டார்கள்.

தெற்கில் வீதி அமைப்பதற்கும், வடக்கில் முகாம்களை விஸ்தரிப்பதற்கும் காணிகள் சுவீகரிக்கப்படுவது என்பதானது, ஒரு பகுதியில் அபிவிருத்தியையும் மறுபகுதியில் ஆதிக்கத்தையும் மேற்கொள்ள அரசு திட்டமிடுகிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

நாட்டின் பிரதான முரண்பாடான தேசிய இன முரண்பாடு என்பதன் இருப்புநிலை குறித்து எவருக்காவது மாக்ஷிச சந்தேகங்கள் வந்தால், வணிக சூரியவின் இந்த மதிப்பீடே தர்க்கீகப் பதிலாக அமையுமென எண்ணத் தோன்றுகிறது.

தற்போது வலிகாமம் வடக்கில் மக்களின் குடியிருப்புக்கள் இடிக்கப்பட்டு காணிகள் அபகரிக்கப்படுகின்றன. உயர்பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட 6382 ஏக்கர் மக்கள் நிலம் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டமைக்கு எதிராக தேர்தலுக்கு முன்பாக பெரும் போராட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. ஆனால், இப்போது நடைபெறும் வீடழிப்புக்கு எதிராக சர்வதேச தலைவர்களிடம் முறையிடப் போவதாக மாவை சேனாதிராஜா குறிப்பிடுகின்றார். இவ்வாறான முறையீடுகளுக்கு என்ன பதில் சர்வதேசத்திடமிருந்து வரும் என்பது, கடந்த வாரத்திலேயே நமக்கு கிடைத்துவிட்டது.

அதாவது, சென்றவாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் மிச்சேல்ஜேசிசனிடம் வலி.வடக்கு வீடழிப்பு குறித்து முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் முறையிட்டார். ஆனால், உள்நாட்டு விவகாரத்தில் தலையிட முடியாது என சீசன் அம்மையார் கைவிரித்து விட்டதாக கூறப்படுகிறது.

கொரியத் தூதுவரும் இதே பதிலைத்தான் விக்கினேஸ்வரன் அவர்களிடம் கூறியிருக்கிறார். ஆனால், வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் மட்டுமே தம்மாலான உதவிகளைச் செய்யமுடியுமென்று இந்த பொருண்மியபலம் பொருந்திய நாடுகளின் பிரதிநிதிகள் கூறிச் சென்றுள்ளனர்.

இவர்கள் தமது எல்லைக் கோட்டினைத் தாண்டி வெளியே வரமாட்டார்கள். அவர்கள் வருவார்கள். எமக்காகப் போராடுவார்கள். இராஜதந்திர நகர்வுகளை நாசூக்காக நகர்த்துவார்கள் என்கிற சிருஷ்டிக்கப்பட்ட கற்பிதங்கள், அமெரிக்க- கொரிய தூதுவர்களின் தலையிடாக் கொள்கையால் அம்பலப்பட்டு நிற்கின்றன.

இலங்கை மீதான வெளிநாட்டு இராஜதந்திர அழுத்தங்களுக்குள் அகப்படாத விவகாரமாக, ஈழத்தமிழ் மக்களின் நில அபகரிப்பு இருப்பதை இவை உணர்த்துகின்றன. நிலச்சிக்கல், இலங்கையின் உள்நாட்டு விவகாரம், ஒன்றுபட்ட நாட்டின் இறைமை குறித்த விடயம் என்றுகூறி அவர்கள் நழுவி விடுவார்கள். அதற்காக அந்த மக்களே போராட வேண்டும்.

**இதயச்சந்திரன்**

# சவுதியில் உள்ள இலங்கையர்களை திருப்பியழைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

**பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்த பின்னரும் சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்ப முடியாமலிருப்பவர்களை அந்நாட்டு சட்ட திட்டங்களுக்கமைய திருப்பியழைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறதென வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான பொது மன்னிப்புக் காலம் கடந்த 3 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. இந்நிலையில் அந்நாட்டில் சட்ட விரோதமாக தங்கியிருந்த 90 சதவீதமானவர்கள் பாதுகாப்பான முறையில் நாடு திரும்பியுள்ளனர் என்றார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சின் பேச்சாளர் மங்கள ரந்தெனிய கூறுகையில்,

சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் 16 ஆயிரம் இலங்கையர்களுள் 15 ஆயிரம் பேர் பொது மன்னிப்புக் காலத்திற்குள் இலங்கைத் தூதரகம் மற்றும் கொன்சியூலர் அலுவலகங்களில் சரணடைந்துள்ளனர்.

இவர்களுள் 12 ஆயிரம் பேர் சவுதி அரேபிய பொலிஸாரின் அனுமதியுடன் இலங்கை வந்தடைந்துள்ளனர். குறுகிய எண்ணிக்கையான ஆயிரம் முதல் 2 ஆயிரம் வரையிலான இலங்கையர்களே பொது மன்னிப்புக் காலத்திற்குள் நாடு திரும்ப முயற்சிக்காது இருந்துள்ளார்கள்.

இவர்கள் சட்ட விரோதமாக சவுதி அரேபியா வந்தமைக்காக அந்நாட்டு அரசாங்கத்தினால் இவர்களுக்கு 30 இலட்சம் ரூபா தண்டப்பணம் அல்லது 2 வருட சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இவர்களை இத்தகைய பாரிய தண்டனைக்கு உட்படுத்தாது அந்நாட்டு சட்ட திட்டங்களுக்கமைய குறுகிய தண்டனைகளுக்கூடாக நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கான முயற்சிகளை அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இவர்கள் எதற்காக மற்றும் எப்படி சவுதிக்குள் வந்தார்கள் என்பது தொடர்பில் ஆராயும் வகையில் குறுகிய காலத்திற்கேனும் சவுதி பொலிஸாரினால் தடுப்புக்காவலில் வைக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

எவ்வாறாயினும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று பாரிய தண்டனைகளிலிருந்து இவர்களை விடுவிப்பது குறித்து இலங்கை தூதரகத்திற்கூடாக அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (அ-2)

# விசேட தேவையுடையோருக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கும் செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடெங்கிலுமுள்ள 5 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல குறிப்பிட்டார்.

இலவசமாக நடத்தப்படும் இந்த தொழிற்பயிற்சிகளுக்கு 16 முதல் 35 வயதான விசேட தேவையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

3 மாதங்கள் தொடக்கும் 2 வருடங்கள் வரையிலான காலப் பகுதியைக் கொண்டதாக இந்த பயிற்சிகள் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி நடவடிக்கைகளுக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறானவர்கள் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்க முடியுமென அனுஷா கோகுல குறிப்பிட்டார்.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு 0112 18 70 40 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ள முடியுமெனவும் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (அ-2)

# சூரன் போர்

(யாழ்ப்பாணம்)


கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய கந்தசஷ்டி உற்சவத்தில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சூரசங்கார உற்சவமும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது. (அ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சிறுகுறிஞ்சா/ சர்க்கரைக் கொல்லி

Botanical Name- Gymnema sylvestre
Family- Asclepiadaceae
Engl-Sugar Killer
Sinh-Masbedda



பல கிளைகளைக் கொண்ட பல்லாண்டு வாழக்கூடிய ஓர் ஏறிகொடித் தாவரமாகும். பெரிய மரங்களின் மீது அதிக உயரத்திற்கு படரும் தடித்தகொடி. இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. 3-5 செ.மீ. நீளமும் 1.3-3.4 செ.மீ. அகலமும் கொண்ட நீள் முட்டை வடிவானது. இலையின் பின்புறம் தெளிவான நரம்பமைப்பைக் கொண்டது. இலைக்காம்பு 0.6 செ.மீ. நீளமுடையது. இருபாலுடைய ஒழுங்கான சிறிய பூக்கள், வெளிறிய மஞ்சள் நிறமுடையவை. கனிகள் மெலிதானவை. விதைகள் முட்டை வடிவானவை. தட்டையானவை. அகன்ற இறகு கொண்டவை. மங்கலான கருஞ் சிவப்பு நிறத்தவை. இரு பருவகாலங்களிலும் பூக்களை காணலாம். பூக்கள் கார்த்திகை முதல் மாசிவரையும் மற்றும் ஆனி மாதத்திலும் காணலாம்.

வேர்க்கன்றுகள் மூலமும் செயற்கை முறையில் தண்டுத் துண்டங்கள் மூலமும் இனவிருத்தி செய்யலாம். இதனுடைய இலைகள், விதைகள், வேர்கள் யாவும் மருத்துவ குணம் மிக்கவை.

### மருத்துவப் பயன்கள்

✦ நீரிழிவு நோயினை இயற்கையாகக் கட்டுப்படுத்த சிறுகுறிஞ்சா தனி மூலிகையாகவும் கூட்டு மருந்தாகவும் சிறந்த பயனைக் கொடுக்கின்றது. இதனைவிட சிறுகுறிஞ்சா சிறந்த கீரையாகவும் தொழிற்படுகின்றது.

✦ நீரிழிவு நோயாளிகள் தினமும் 3, 4 இலைகளை நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக அரிந்து வாயில்போட்டு மென்று சாப்பிட்டுவர நீரிழிவு கட்டுப்படுவதுடன் இயற்கையாகவே இனிப்பு சுவை அரும்பர்களை செயழிலக்கச் செய்வதால் இனிப்பு சுவை எடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் இருக்காது. வாரத்தில் 5 நாட்கள் இவ்வாறு பயன்படுத்தலாம். ஆனால் அடிக்கடி சிறுநீரில் இரத்தத்தின் அளவை பரிசோதித்தல் அவசிய மாகும்.

✦ சிவத்த பச்சரிசியுடன் சிறுகுறிஞ்சா இலைகளை சேர்த்து இடித்து அந்த மாவைக் கொண்டு களி, ரொட்டி, பிட்டு தயாரித்தும் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். இலைகளை அரிசியுடன் சேர்த்து இடித்து பயன்படுத்தும் போது இலைகளிலுள்ள சத்துடன் மாவானது



கொலஸ்ரோலாக மாறி அகத்துறிஞ்சப்படுவதை தடுக்கின்றது. ஆகவே மேலதிக கொலஸ்ரோல் இரத்தத்தில் சேருவதையும் தடுக்கக் கூடியதாக அமையும்.

✦ இலைகளில் காணப்படும் மருந்துச் சத்தான Gymnemic Acid ஆனது கணையத்திலுள்ள கலங்களை புத்துயிர்க்கச் செய்து இன்சுலின் சுரப்பை மேம்படுத்துகின்றது.

(Reduces blood sugar acting in directly through the stimulation of insulin secretion by the pancerease wealth of india)

✦ நீரிழிவுக்கு சிறந்த மூலிகையாக பயன்படும் சிறுகுறிஞ்சாவை யாழ்ப்பாண மக்களிலும் மருந்துப் பாவனையிலும் நூற்றுக்கு 70% மானோர் வேறு ஓர் மூலிகையை பயன்படுத்துகிறார்கள். உருவவியல் ஒத்ததுபோல் காணப்படும் போலி சிறுகுறிஞ்சாவானது தூய இன மூலிகையின் செய்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தூய மூலிகையை அதனுடைய சுவை, வீரிய, விபாக (Organoleptic charectors) அடிப்படையிலேயே வேறுபடுத்தக்கூடியதாக இருக்கும். இது உருவவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளதுமாகும்.

✦ தூய இனத்தை இனங்காண சிறுகுறிஞ்சா இலைகளில் 3,4 இனை எடுத்து சிறிது சிறிதாக அரிந்து வாயில்போட்டு நன்றாக மென்று சாப்பிட்ட பின்பு சீனி அல்லது உப்பை வாயில் போட்டுநாக்கால் சுவைத்தால் சுவையை உணரமுடியாது. வாயில் மண்ணைப் போட்டு சுவைப்பது போல் இருக்கும். இந்த மூலிகையில் Gymnemic Acid உம் காணப்பட மாட்டாது. நீரிழிவையும் கட்டுப்படுத்த முடியாது.

**போலி இன சிறுகுறிஞ்சாவின்**

Botanical Name- Gymnema lactiferum
Family- Asclepiadaceae

இதனால்தான் சித்தர்களின் மருத்துவ நூல்களில் சர்க்கரை கொல்லி என்ற பெயருடன் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மருந்துகள் தயாரிப்பவர்கள், சிறுகுறிஞ்சாவை பயன்படுத்துபவர்கள் தூய இனத்தை இனங்கண்டு பயன்படுத்தினால்தான் நீரிழிவை கட்டுப்படுத்த முடியும். எனவே, முதலில் சர்க்கரைக் கொல்லி மூலிகையை உருவவியல் ரீதியாக உறுதிப்படுத்திக்கொள்ள அத்தியாவசியமாகின்றது.

நீரிழிவு நோயாளர்கட்கு அடிக்கடி சிறுநீர் கழிவதால் மலக்கட்டு ஏற்படுவதற்குரிய வாய்



ப்பு அதிகமாகின்றது. இதற்கு சர்க்கரை கொல்லியிலுள்ள நார்ச்சத்தும் மற்றும் Anthra quinone எனும் வேதியற் பொருளும் காணப்படுவதால் மலமிளக்கி செய்கையும் உண்டு.

இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி இடித்து துணியில் அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இரத்தத்திலுள்ள சீனியின் அளவிற்கு ஏற்ப 1-2 கிராம் அளவு தினமும் இரண்டு வேளை வெந்நீரில் உட்கொள்ளலாம்.

சர்க்கரைக் கொல்லி வேர்களை சேகரித்து 1 பங்கு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க இருமல் தணியும்.

**சர்க்கரைக் கொல்லி இலை ரசம்/ சூப்**



திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

நீர்-400 மில்லி
சர்க்கரைக் கொல்லி இலை- 2 கப்

**சிறுகுறிஞ்சான் இலை ரசம்**

தேவையான பொருள்

இரண்டு கப் தண்ணீர், சிறுகுறிஞ்சான் இலை இரண்டு கப், சோம்பு ஒரு ஸ்பூன், சீரகம் ஒரு ஸ்பூன், மிளகு ஒரு ஸ்பூன், வெங்காயம் சிறியது ஒரு சிறுகப், எலுமிச்சைச் சாறு 1/4 கப், தேவையான அளவு உப்பு, மல்லித்தூள் மூன்று ஸ்பூன், முழு வெங்காயம் ஐந்து, கசகசா மூன்று ஸ்பூன், சுண்டவத்தல் பொடி ஏழு ஸ்பூன்.

**செய்முறை**

ஒரு மண்சட்டியில் தண்ணீரை ஊற்றி வெங்காயம் போடவும். மல்லித்தூள், உப்பு, சோம்புத்தூள், சீரகத்தூள் போடவும். கசகசாவை அரைத்துப் போடவும். இதனை அடுப்பில் ஏற்றி கொதிக்க விடவும். சிறு குறிஞ்சான் இலையை அலசி அரிந்து வேகவிடவும். இரண்டு கப் தண்ணீரின் சூப் ஒரு கப் அல்லது அரைக்கப்பாக சுண்டியதும் இறக்கி வைத்து மிளகு, வெங்காயம் ஒன்றி ரண்டாக தட்டி போடவும். எலுமிச்சை சாறு ஊற்றவும். சுண்ட வத்தல் பொடியை தூவ வேண்டும். இதன் சூப்பை எடுத்து காலை வெறும் வயிற்றில் சாப்பிடவும். மாலை கோப்பிக்கு பதில் சாப்பிடவும். முதல் நாள் இரவு இவ்வாறு சூப் செய்து வைத்திருந்து மறுநாள் காலை குடித்து வரவும்.

# இசைப்பிரியாவின் படுகொலைக்கு த.தேசிய கூட்டமைப்பு கண்டனம்

(பூந்தோட்டம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறையில் பணியாற்றிய இசைப்பிரியாவை இலங்கை இராணுவம் படுகொலை செய்த காட்சியை அண்மையில் சனல்4 தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது. இந்தக் கொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறையில் பணியாற்றி பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இசைப்பிரியா என்பவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்பதை ஏற்கனவே சனல் 4 தொலைக்காட்சி பட்டவர்த்தனமாகத் தெரிவித்திருந்தது. இதனை இலங்கை இராணுவம் முதலில் மறுத்தாலும் பின்னர் அவர் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் அதனால் அவர் போரில் கொல்லப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் முன்னர் கூறியிருந்தார்.

ஆனால் இப்பொழுது வெளிவந்திருக்கும் புதிய காணொளிகள் இசைப்பிரியா உயிருடன் கைது செய்யப்பட்டு அரை நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதையும் மிகத் தெளிவாக சித்திரித்திருக்கின்றது. தான் பிரபாகரனின் மகள் அல்ல என்பதையும் அவள் அங்கு தெரிவித் திருந்ததை நாங்கள் அதில் கேட்கக் கூடியதாக இருந்தது. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டிருந்ததாக ஐ.நா.சபையின் மூவர் அடங்கிய நிபுணர் குழு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

அதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகவும் ஓர் சர்வதேச விசாரணை மூலம் தான் அவற்றைக் கண்டறிய முடியும் என்றும் அந்த நிபுணர் குழு தெரிவித்திருந்தது. இதனையே ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே அடிப்படையில் இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளது என்பது இன்று சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயமாக இருக்கின்றது. கடந்த வருடம் பிரபாகரனின் மகனான பாலச்சந்திரன் என்ற சிறுவன் எவ்வாறு இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டார் என்பதை சனல்4 மிகத் தெளிவாக வெளியிட்டிருந்தது. இப்பொழுது இசைப்பிரியாவின் படுகொலை எவ்வாறு இலங்கை இராணுவத்தால் மூர்க்கத்தனமாக நடாத்தப்பெற்றது என்பதையும் இதே தொலைக்காட்சி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி, நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரும் இக்கொலையைக் கண்டித்தது மட்டுமன்றி,இது பற்றி முழுமையான விசாரணையொன்றை இலங்கை அரசு நடாத்தி பொறுப்புக் கூற வேண்டும் என்றும் இந்திய அமைச்சர்கள் கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

யுத்தக்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கெதிரான குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுடன் இலங்கை அரசுக்கு நேரடியான தொடர்பு இருப்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல முறை சுட்டிக்காட்டியிருக்கின்றது. இப்பொழுது அந்தக் குற்றச்சாட்டிற்கு இசைப்பிரியாவின் கொலை ஆதாரம் மேலும் வலுச்சேர்க்கிறது.

இத்தகைய ஒரு அரசுக்கெதிராக சர்வதேச விசாரணையை நடத்த வேண்டிய ஒரு சூழலில் இலங்கை அரசாங்கம் நடத்தவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் அதன் உறுப்பு நாடுகள் பங்கேற்பதென்பது இலங்கை அரசாங்கத்தின் பாரிய யுத்தக் குற்றங்களை மூடிமறைப்பதற்கே வழிவகுக்கும்.

இலங்கையில் இந்த மாநாடு நடைபெறுவதன் மூலம் அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கவிருக்கும் தலைமைப் பொறுப்பானது சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இனவிரோத நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிப்பதாகவும் இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை உறுப்பு நாடுகள் மூடிமறைப்பதாகவுமே பொருள் கொள்ளப்பட முடியும்.

பொதுநலவாய நாடுகளின் மகாநாடு இலங்கையில் நடப்பதன் மூலம் பொதுநலவாய மாநாட்டின் பிரதான பிரகடனங்களான ஜனநாயகம், மனிதவுரிமை மீறல்கள் போன்றவற்றின் விழுமியங்களையே கேள்விக்குள்ளாக்கி விடும்.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் யுத்தக் குற்றங்களுக்கோ, காணாமல் போகச் செய்யபட்டோர் தொடர்பாகவோ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவோ எதுவிதமான விசாரணைகளோ முன்முயற்சிகளோ மேற்கொள்ளப்படாத நிலையில் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றே மேற்கண்ட பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைத் தேடித்தரும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர். இவ்வாறு சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-266)

## குளங்களில் குப்பை போடுவதை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை



(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள குளங்களில் பழைய கழிவுகள் வீசப்படுவதால் சூழல் பாதிக்கப்படுவதோடு, துர்நாற்றமும் வீசுகின்றது என போக்குவரத்து செய்யும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

வைரவ புளியங்குளம், பண்டாரிக்குளம் முதலான இடங்களில் உள்ள குளங்களில் பழைய கழிவு பொருட்கள் வீசப்படுவதுடன் வீடுகளில் உள்ள முறிந்த மரங்களின் கழிவுகளும் வீசப்பட்டுள்ளன. இதனால் குளங்கள் அசுத்தமடைவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது'. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

## வன்னியின் வாதச் சமர்-2013

(குருமன்காடு)

தமிழ் மாமன்றத்தினர் நடத்திய வன்னியின் வாதச் சமர் -2013 வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

15 பாடசாலைகளைச் சேர்ந்த 45 மாணவர்கள் இதில் பங்கு பற்றி இருந்தனர்.

பொதுவாக விவாதப் போட்டியில் வெற்றி பெறும் அணிதான் அடுத்த சுற்றுக்குள் முன்னேற முடியும். ஆனால் இந்த வாதச் சமர் லீக் முறையிலே இடம்பெற்றது.

லீக் சுற்றில் ஒரு அணி 4 போட்டிகளை எதிர்கொண்டது. இதில் புதுவிதமான ஒரு நேர்த்தியான புள்ளித் திட்டத்தினை தமிழ் மாமன்றம் அறிமுகப்படுத்தியிருந்தது.

இதில் புள்ளிகள் அடிப்படையில் முதல் எட்டு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிக்குள் முன்னேறியுள்ளன. இந்த அணிகளுக்கான காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

இதில் வெற்றி பெறும் அணிக்கு தமிழ் மாமன்றத்தின் கலாசார நிகழ்வில் பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளன. (ம-250)

## புனர்வாழ்வு வழங்க நீதிமன்றம் உத்தரவு

(முல்லைத்தீவு)

3 வயது நிரம்பிய குழந்தை ஒன்றுக்கு தாயான பெண் ஒருவர் (வயது 32) கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமைக்கான தண்டப் பணமாக ரூபா 50 ஆயிரம் செலுத்தும்படி உத்தரவிட்டப்பட்டதையடுத்து, அப்பெண் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை எனவும் தன்னால் பணம் எதுவும் செலுத்தமுடியாதெனவும் பெரும் அழுகை மத்தியில் தெரிவித்துள்ளார்.

இதனால் அப்பெண்ணை பாரதி இல்லத்திலும் குழந்தையை அன்பு இல்லத்திலும் பாரப்படுத்தி அதே சிறுவர் இல்லத்தில் குறித்த பெண்ணை சேவையில் ஈடுபடுமா றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அவருக்கு உளவியல் சிகிச்சை அளிக்கவும் புனர்வாழ்வு அளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. சட்டப்படி சமுதாய சீர்திருத்த பிரிவின் விசேட செயற்றிட்டத்தின் கீழ் இந்த உத்தரவு இடப்பட்டுள்ளது. (ம)

## சிறுவர் சுற்றாடல் பதக்கம் வழங்கும் விழா

(பூந்தோட்டம்)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் சிறுவர் சுற்றாடல் கழக பதக்கம் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் பாடசாலை வளாகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி கே. நந்தபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா பிரதம அதிதியாகவும் மாவட்ட சுற்றாடல் ஆலோசகர் பி. சண்முகதேவன், சுற்றாடல் அதிகாரசபை அலுவலர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டிருந்தனர்

இதன்போது கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சுற்றாடல் தொடர்பில் சிறப்பாக செயற்பட்ட மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன. (ம-266)




## மருத்துவ பரிசோதனை

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ பரிசோதனையில் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோர் மட்டுமே பங்குபற்ற முடியும். கொழும்பிலிருந்து வரும் விசேட மருத்துவ நிபுணர்கள் 10 பேர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இப்பரிசோதனை நடவடிக்கைகளுக்கு வருபவர்கள் வழமையான மருத்துவ பரிசோதனைக் கட்டணம் ரூபா 600 ஐக் கொண்டுவருதல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)



வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் இடம்பெற்ற நரகாசூரன் போரின் போது...

(படம்:- குருமன்காடு செய்தியாளர்)

## இயற்கை அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான கலந்துரையாடல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் இயற்கை அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் , மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாசன் , பிரதேச செயலர்கள், தொடர்புடைய திணைகளங்களின் உயரதிகாரிகள் , அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனர்த்தங்களை எதிர்கொள்வது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட திட்டம் குறித்து விளக்கப்பட்டது.

பெரும் மழையால் பாதிக்கப்படும் பிரதேசங்களில் அனர்த்தங்களை எதிர் கொள்ளுதல், 'அதன் பாதிப்புக்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் முதன்மையாக ஆராயப்பட்டன.

வேள்ட் விசன் நிறுவனம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவை வலுவூட்டுவதற்காக கணனி, பல்லூடக எறிகருவி, போட்டோ பிரதி இயந்திரம் போன்ற உப கரணங்கள் வழங்கப்பட்டன. (ம-254)

### மாநாட்டில் இந்தியா பங்கேற்றால்

# இலங்கையில் நடந்தேறிய படுகொலைக்கு ஆதரவு தழுவியதாகிவிடும்-திருமாவளவன்

(சென்னை)

**இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது. இந்தியா சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கக் கூடாது. இந்தியா பங்கேற்றால் இலங்கையில் நடந்தேறிய இனப்படுகொலைக்கு ஆதரவு தெரிவித்தது போலாகிவிடும். சர்வதேச மன்றில் இலங்கைக்கு அங்கீகாரம் கிடைத்து விடும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி. தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றையதினம் வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்றது.

கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி. தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

குறித்த மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி ஏராளமானோர் வருகை தந்திருந்தனர்.

இலங்கைக்கு எதிராக திருமாவளவன் கோஷங்கள் எழுப்ப அவரை தொடர்ந்து கட்சி தொண்டர்களும் குரல் கொடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது திருமாவளவன் கூறியதாவது.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக்கூடாது.

இந்தியா சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இப் பிரச்சினையில் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ஒருமித்த கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். மத்திய அமைச்சர்கள் ஜி.கே.வாசன், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் தமிழக மக்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கு எடுத்து கூறி தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், பிரதமர் நல்ல முடிவு எடுப்பார் என்று கூறியுள்ளார்.

தமிழக கங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனும் தனது உணர்வை வெளிப்படுத்தி உள்ளார்.

இந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்றர்ல் இலங்கை அரசு செய்த இனப்படுகொலைக்கு ஆதரவு தெரிவித்தது போலாகிவிடும். சர்வதேச மன்றத்தில் அங்கீகாரம் கிடைத்து விடும்.

தமிழக காங்கிரசில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் இந்த மாநாட்டில் பிரதமர் நிச்சயமாக கலந்து கொள்ளமாட்டார் என நான் நம்புகிறேன்.


இந்த பிரச்சினையில் பாரதீய ஜனதா கட்சி அரசியல் நடத்துகிறது. பொதுநலவாய மாநாட்டில் இந்தயா கலந்து கொள்ள வேண்டும் என காங்கிரஸ் கட்சிக்கு அது நெருக்கடி கொடுக்கிறது.

ஆட்சியில் இருந்த போதும் பாரதீய ஜனதா ஈழத்தமிழர்களுக்காக எதனையும் செய்யவில்லை. இம் மாநாட்டிலும் இந்தியா கலந்து கொள்ளவில்லை என்றால் இரு நாடுகளுக்குமிடையே உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டுதான ஈழத் தமிழர்களுக்கு நல்லது செய்ய வேணடும் என்று இல்லை. இதில் பங்கேற்காமலேயே நன்மை செய்யலாம்.

இசைப்பிரியா உயிரோடு பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கான ஆதாரமாக வீடியோ பதிவுள்ளது.

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை ஆணைய கூட்டத்தில் இசைப்பிரியா கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரத்தை வெளியிடுவதன் மூலம் இலங்கை அரசுக்கு மேலும் நெருககடி ஏற்படும் என அவர் கூறினார். (2)



கரவெட்டி ரவீன்ஸ் EMC கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கண் சிகிச்சை நிபுணர் எம்.மலரவன் தம்பதிகள் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# முஷாரப்பிற்கு பிணை; பாக்.நீதிமன்றம் உத்தரவு



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பிற்கு பாகிஸ்தான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியது.

இதனிடையே, முஷாரப் தீவிர அரசியலில் ஈடுபடப் போவதாக அவரது கட்சி அறிவித்துள்ளது.


முஷாரப்பிற்கு பிணை கிடைத்தாலும் அவர் பாகிஸ்தானை விட்டு வெளியே செல்லக் கூடாதோர் பட்டியலில் உள்ளார். இது குறித்து கருத்து தெரிவித்த முஷாரப்பின் அகில பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் செய்தித்தொடர்பாளர் ஆஷிக் இஷாக், "முஷாரப் பாகிஸ்தானை விட்டு வெளியே செல்லப் போவதில்லை. அவர் தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளார்.

முஷாரப் விரைவில் பிரசாரம் மேற்கொள்வார்" என்று கூறினார். சிவப்பு மசூதி தாக்குதல் வழக்கின் விசாரணை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் முஷாரப்பின் பண்ணை வீட்டில் தொடங்கவுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் போட் டியிடும் நோக்கில் கடந்த மார்ச் மாதம் நாடு திரும்பிய பர்வேஸ் முஷாரப் கைது செய்யப்பட்டு அவரது பண்ணை வீட்டில் சிறை வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# கரவெட்டியில் மின்சார மயானம் அமைக்க உதவி கோரப்படுகின்றது

**உபாலி எஸ்.பொன்னம்பலம்**



கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம். கரவெட்டி வாழ் மக்களுக்கு பொதுவான பல பிரச்சினைகள் குறிப்பாக சுகாதாரம். குடிநீர். கல்வி போன்ற துறைகளில் இருந்ததை இனங்காண முடிந்தது. இவற்றிற்கும் வேறும் பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முகமாக உருவாக்கப்பட்டது.

அதற்கிணங்க 2005 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சேவை நிறுவனம் பல பிரச்சினைகளில் பொறுப்பெடுத்து சில திட்டங்களையும் சேவைகளையும் நடைமுறைப்படுத்தியது. அவற்றில் சில பின்வருமாறு:

1. கரவெட்டியில் புது பிரதேச வைத்தியசாலைக்கான காணியை பெற்றுக்கொடுத்து சுற்று மதிலும் அமைத்தமை
2. வைத்திய கலாநிதிக்கான வதிவிடத்தினை நிர்மாணித்தமை
3. தாதியர் விடுதி நிர்மாணித்தமை
4. குடிநீர் வசதியின்றி பாதிக்கப்பட்ட பல கரவெட்டி வாழ் மக்களுக்கு மாயக்கை நீர் விநியோகத் திட்டம் மூலம் 1000 வீடுகளுக்கான நன்னீர் வழங்கும் திட்டத்தின் ஊடாக குழாய் மூலம் வீடுகளுக்கு நன்னீர் வழங்கியமை.
5. சோனப்பு இந்து மாயனம் புனரமைத்தமை
6. வறிய பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கியமை
7. பல்கலைக்கழக அனுமதி பெற்றும் கல்வியைத் தொடரமுடியாத துரதிர்ஷ்ட நிலையிலுள்ள மாணவர்களுக்கு தொடர் நிதியுதவி வழங்கியமை போன்ற திட்டங்களை எமது ஒன்றியம் திரட்டிய பணத்தில் இருந்து செலவிடப்பட்டது. சில சேவைகள் அரசாங்கத்திடமிருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் எமது பங்களிப்புமான கூட்டு முயற்சியாக செயற்படுத்தப்பட்டது. இதுவரை ஏறத்தாழ இலங்கைப் பணத்தில் ரூபா 11 மில்லியன் செலவிட்டுள்ளோம்.

பிரதான ஐக்கிய இராஜ்ஜியத்திலும் (UK) கனடாவிலும் வாழும் கரவெட்டி மக்களின் பங்களிப்புக் காரணமாகவே மேற்காட்டிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தருணத்தில் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

தற்போது கரவெட்டி வாழ் மக்கள் முகங்கொடுக்கவேண்டிய பிரச்சினை ஒரு புது மின்சார மயானம் ஆகும். இப்போதும் பாரம்பரிய முறையிலேயே பின்பற்றப்படுகிறது. இதன் காரணமாக பாரியளவு விறகு தேவையாகவுள்ளது. எரிப்பதற்கு தொழிலாளர்களை கூலிக்கு பெற வேண்டியுள்ளது. இவையிரண்டும் அருகி வருவதால் மின்சார மயானம் இன்று அத்தியாவசியமாகியுள்ளது.

ஆகவே கரவெட்டியில் பிறந்து வளர்ந்து தற்போது உள்ளூரிலும் வெளியிடங்களிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் மிகுந்த எதிர்பார்ப்புடன் சமர்ப் பிக்கின்றது. அண்ணளவாக இத் திட்டத்தின் மதிப்பீடு இலங்கைப் பணத்தில் ரூபா 15 மில்லியன் ஆகும். தங்கள் நிதியுதவியின் மூலம் இத்திட்டம் நிறைவேறும் என கரவெட்டி மக்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் கொமர்ஷியல் வங்கி நெல்லியடிக் கிளையின் கணக்கு இலக்கம் **110 801 6495**

**மேலதிக விபரங்கட்கு:**

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்

**தொலைபேசி இலக்கம்: 0094 21 226 3743, 0094 77 184 4420**

(சீ-5388)

# பொன்தீவு கண்டல் கிராமத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு

## அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவிப்பு

(மன்னார்)

**பொன்தீவு கண்டல் கிராமத்தில் முஸ்லிம்களுக்குரிய மையவாடி காணப்படுகின்றமையானது இங்கு முஸ்லிம் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் சிலர் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிகிறேன் என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**



மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் பொன்தீவுகண்டல் கிராமத்தில் முஸ்லிம்களுக்கென முன்னெடுக்கப்பட்டு வந்த இந்திய வீடமைப்புத்திட்டம் அப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்த கலவர நிலை காரணமாக பிரதேச செயலர் சந்திர ஐயரால தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக ஆராயும் வகையில் அமைச்சர் பதியுதின் உட்பட மக்கள் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் கிராமத்துக்குள் சென்று மக்களோடு கலந்துரையாடினர். அக்கலந்துரையாடலிலேயே அமைச்சர் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

பூவரசன் குளம் கிராமம், மற்றும் பொன்தீவுகண்டல் கிராமங்களில் முஸ்லிம், தமிழ் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்துவருகின்றனர்.

இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு இப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்போது இங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் சமாதானம் ஏற்பட்டதனையடுத்து இக்கிராமத்துக்கு வந்த போது, இம்மக்கள் தமது இல்லறங்களை அமைத்துக் கொள்ள காணி தேவைப்பாடு காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டு பிரதேச செயலாளர் சந்திர ஐயர், இந்தக் காணியினை உரிய சட்ட திட்டத்திற்கமைய முஸ்லிம் மக்களுக்கு பெற்றுக் கொடுத்தார்.

அதனையடுத்து காணிகள் அம்மக்களால் துப்புரவு செய்யப்பட்டு இந்திய வீடமைப்பு திட்டத்திற்குள் தமிழர்களும், முஸ்லிம்களும் உள்வாங்கப்பட்டனர். அந்தவகையில் 115 முஸ்லிம்கள் தமது பதிவுகளை செய்திருந்த நிலையில் இந்திய வீடமைப்பு திட்டத்தில் 44 குடும்பங்கள் மட்டும் உள்வாங்கப்பட்டன. அதே வேளை 88 தமிழ் குடும்பங்கள் தமது பதிவினை இப்பிரதேசத்தில் கொண்டுள்ள நிலையில் அவர்களுக்கு 36 வீடுகள் வழங்கப்பட்டன.

தற்போது கடந்த 3 மாதகாலமாக முஸ்லிம் மக்கள் தமது நிர்மாணப் பணிகளை முன்னெடுத்து வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிற பிரதேசங்களில் இருந்து அரசியல் மற்றும் மதவாதிகளினால் அழைத்து வரப்பட்ட குழுவினர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி பிரதேச செயலாளரை தமது பணிகளை செய்ய விடாது தடுத்தும் உள்ளனர்.

இந்த நிலையை அடுத்து அப்பிரதேசத்தில் பதற்ற நிலை காணப்பட்டது.

இந்நிலையில் அங்கு விஜயம் செய்த அமைச்சர், பிரதேச செயலர் பாராளுமன்ற உறுப்பினர், ஹூனைஸ் பாரூக் உள்ளிட் அதிகாரிகள் முஸ்லிம்களுக்கு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்ட காணிகளை பார்வையிட்டதோடு, தமிழ் மக்கள் துப்புரவு செய்த அரச காணிகளையும் பார்வையிட்டனர்.

அப்பொழுது, பிரதேச செயலர்' என்ற வகையில்தான் காணி தேவைப்படுபவர்கள் தொடர்பில் நேர்மையாக அவற்றை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் இங்கு வாழ்வோர் வெளிமாவட்டத்தவர் அல்லர். பரம்பரையாக அப் பகுதியில் வாழ்ந்தவர்களே என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் பேசுகையில,

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் மக்கள் மிகவும் நெருக்கமாக இனம்,மதம் கடந்த நிலையில் வாழ்கின்றனர்.

தமது சில தேவைகளுக்காக சிலர் இவ்வாறன முரண்பாடுகளை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ள தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையில எவ்வித பிரச்சினைகளும் இல்லையென்றும் கூறினார். (ம)

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துக

(பூநகரி)

பூநகரி பகுதியில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் கட்டாக் காலிகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

கட்டாக்காலிகளை வளர்ப்போர் இவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக உரியதரப்பிணர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(ம-84)



# வீதிகளை உடன் புனரமைக்குமாறு வவுனியா வடக்கு மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

கரப்புக்குத்தி, நைனாமடு, சின்னடம்பன் ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகள் சீரின்மையால் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்ற மக்கள் இவ்வீதிகள் எப்போது புனரமைக்கப்படும் என கேள்வி எழுப்பியுள்ளனர்.



குறித்த வீதிகளின் புனரமைப்புக்கென கற்களும் கிரவல் மணல்களும் வீதியோரங்களில் வீசப்பட்டுள்ள போதிலும் வீதிப்புனரமைப்பு வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


இதேவேளை புறநெகும திட்டத்தின் கீழ் இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் நெடுங்கேணி பிரதேச சபைக்கும் வீதிவேலை ஒப்பந்தக்காரருக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதால் இவ்வீதிகளின் அபிவிருத்திகள் ஸ்தம்பித மடைந்துள்ளன.

இவ்வீதிகளைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரப்பட்டுள்ள போதிலும் இதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த வீதிகளைப் புனரமைப்புச் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# கடற்றொழில் சமாசத்துடன் மீன்பிடி அமைச்சர் சந்திப்பு

(மன்னார்)



இந்திய படகுகளின் அத்துமீறிய வருகையும் மீன்பிடி உபகரணங்களின் விலையேற்றமும் மக்களை வெகுவாக பாதித்துள்ளது என மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் நிக்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்றொழில் அமைச்சர் பா.டெனிஸ்வரனுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மீனவ சமூகங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும் அதனூடாகவே அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளமுடியும்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நான் ஆராய்ந்து, ஒரு இராஜதந்திர முடிவினை பெற்றுதருவதில் முனைப்பாக செயற்படுவேன். இலங்கையிலும் தடை செய்யப்பட்ட தொழில்களை நமது மீனவர்கள் நிறுத்த வேண்டும். கடல் வளங்கள் வெகுவாக அழிந்து செல்லும் அபாயம் இருப்பதனால் எதிர்காலத்தில் வேறு நாடுகளில் இருந்து உணவுக்கான மீனை நாம் கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் .

எனவே எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் எதை விட்டு செல்லப் போகின்றோம் என சற்று சிந்தியுங்கள். எதிர்காலத்தில் மீனவர்களின் அபிவிருத்தி தொடர்பில் தான் அக்கரையுள்ளவனாக இருப்பேன். இன்னும் பல திட்டங்களுடன் உங்களை மீண்டும் சந்திப்பேன் என கூறினார். (அ்-4)

# 250 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்



(பூந்தோட்டம்)

வவுனியாவைச் சேர்ந்த இருநூற்றி ஐம்பது பட்டதாரிகளுக்கு நேற்று நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

கடந்த வருடம் பட்டதாரிகள் பயிலுநர் தரத்தில் அரச சேவையில் உள்வாங்கப்பட்டு இதுவரை காலமும் பல்வேறு திணைக்களங்களிலும் பயிலுநர்களாக கடமையாற்றி வந்த நிலையில் நேற்றையதினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து 250 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ள இந் நியமனங்களை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் வழங்கி வைத்திருந்தார்.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்ஹூனைஸ்பாரூக், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன், பிரதேச செயலாளர்களான க. பரந்தாமன், க. உதயராசா, என். கமலதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ம-250-266)

## விவசாயிகளுக்கான உரவிநியோகம்

(கண்டாவளை)

இவ் ஆண்டுக்கான கால போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே கமக்கார அமைப்புக்களூடாக பதிவுகளை மேற் கொண்டவர்களுக்கான உர விநி யோகம் புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் உர விநியோகம் உரிய காலப் பகுதியில் வழங்கப்படாமையால் விளைச்சல் குறைவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-263)

கோழைத்தனம் என்பது அனைத்தையும் பாழாக்கும். வீரமே அனைத்தையும் வெல்லும்.
– நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர் முருகன் இல்லை என்றால் எங்கள் கதி என்ன?

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மாலை நேரப் பூசை முடிந்து அடியார்கள் ஆலயத்தில் இருந்து வெளிவந்தபோது, ஓர் அன்பர் சந்தித்தார்.

நல்லூர் முருகன் இல்லையென்றால் எங்கள் கதி என்ன? என்று திடீரென நம்மைப் பார்த்துக் கேட்டார். அவரின் கேள்வியில் நாம் அதிர்ந்து போனோம்.

கந்தசஷ்டி விரதகாலம் இது. இக்காலத்தில் நல்லூர் முருகனை நினைப்பதும் அவன் நாமத்தை உச்சரிப்பதும் பாடுதலும் பணிதலும் வழமை.

ஆனால், இந்த அன்பர் ஒரு ஆற்றுகை நினைப்பாக நல்லூர் முருகன் இல்லை என்றால் எங்கள் கதி என்னவாகியிருக்கும் என்று கேட்டதில் இருக்கக்கூடிய ஆழமான அர்த்தங்களை நினைத்துப் பார்த்தேன்.

அந்த நினைப்பு தேரடி வில்வமரத்தைச் சுற்றும்போதும் தவத்திரு செல்லப்பா சுவாமிகளும் யோகர் சுவாமிகளும் தவமிருந்த தேரடியை வலம் வரும்போதும் உள்ளத்தை உறுத்தவே செய்தது.

எங்கள் தமிழினத்தில் ஒவ்வொருவருக்கும் பெரும் துன்பம் இருக்கவே செய்கிறது. மனித வாழ்வு என்றால் துன்பமும் இன்பமும் இருக்கவே செய்யும். ஆனால் இலங்கைத் தமிழர்களாகிய எமக்கு வாழ்க்கையில் இருக்கக் கூடிய துன்பம் என்பதற்கப்பால், சொந்த மண்ணில் வாழ முடியாத துன்பம்; காணாமல்போன பிள்ளைகளை நினைக்கும்போது துன்பம்; சிறைகளில் அடைபட்டு இது வரை விளக்கம், விசாரணைகள் இன்றித் தவிக்கும் உறவுகளின் சோகத்தைப் பார்க்கத் துன்பம் என்பதால், நல்லூர் முருகன் ஒருவனே! நமக்கு ஆறுதலாக இருக்கிறான். முருகனும் இல்லையென்றால் எங்கள் கதி என்ன? என்ற பொருளில் அந்த அன்பர் அப்படிக் கூறியிருக்கலாம்.

அல்லது; நாடு கிடைக்கும், வடக்கில் நல்லாட்சி நடக்கும், ஜெனிவாத் தீர்மானம் எங்களுக்கு விடிவைத் தரும் என்றெல்லாம் நம்பிக் கெட்டு, காலம் கழித்து இப்போது எவரையும் நம்ப முடியவில்லை என்ற எங்கள் அரசியல் நிலைமையை நினைக்கும்போதெல்லாம் முருகா! நீயும் இல்லையென்றால் எங்கள் துன்பங்களை யாரிடமடா போய்ச் சொல்ல முடியும் என்ற பொருளிலும் நல்லூர் முருகன் இல்லையென்றால் எங்கள் கதி என்ன? என்று அவர் கூறியிருக்கலாம்.

எதுவாயினும் அந்த அன்பர் கூறியது தனித்து ஆற்றுகை சார்ந்தது மட்டுமல்ல. இறைவனின் நம்பிக்கை ஒன்றில் மட்டுமே எங்கள் வாழ்க்கை இத்துணை துன்பத்தின் மத்தியிலும் நகர்ந்து செல்கிறது. அதுவே எங்கள் பலமாகவும் இருக்கிறது.

மற்றும்படி நாங்கள் நம்பியவர்கள் எல்லாம் எங்களை நட்டாற்றில் விட்டதாக–விடுவதாக இருந்தது–இருக்கிறது.

முருகா! நீ சூரனை வதைத்தவன். சூரர்களை வதைத்தால்தான் நல்லவர்கள் வாழ முடியும் என்பதை நீ நன்குணர்ந்தவன்.

எல்லாம் உணர்ந்த நீ தமிழர்களுக்கு ஒரு நல்ல அரசியல்த் தலைமையை தராமல் பின்னடிப்பது ஏன்?

உண்மையான பற்றும் உண்மையான விசுவாசமும் தியாகமும் அர்ப்பணிப்பும் தமிழ் மக்களிடம் தாராளமாக இருக்கிறது. ஆனால் தலைமையிடம் இல்லையே!

முருகா! இந்த வருட சூரன்போரில் நீ சூரனை தோற்கடிக்காவிட்டாலும் பரவாயில்லை. எங்களுக்குள் இருக்கின்ற சூரர்களை ஒருகை பார். தூய்மையான அரசியல் தலைமை நமக்குக் கிடைப்பதற்கு உதவி செய் முருகா!

# பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு 20 ஆயிரம் பொலிஸார் கடமையில்

பொதுநலவாய நாடுகள் மாநாட்டை முன்னிட்டு 20 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அநுர சேனாநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்மாதம் 9 ஆம் திகதி முதல் 15 திகதி வரையில் 53 நாடுகளின் அரச தலைவர்கள் உட்பட பல வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை தரவுள்ளமையினால் போக்குவரத்து பாதைகள் தேவைக்கேற்ப மூடி மீண்டும் திறக்கப்படும்.

ஆனால் பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படும் வகையில் மணித்தியாலக்கணக்கான போக்குவரத்து தடைகள் ஏற்படாது. ஆகக்கூடியது 20-40 நிமிடங்கள் மட்டுமே போக்குவரத்து தடை ஏற்படும்.

இக்காலப் பகுதியில் மொரட்டுவையிலிருந்து கொழும்புக்கு விசேட ரயிலொன்றை ஏற்பாடு செய்யுமாறு ரயில்வே திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு பாதைகள் அனைத்தும் முழுமையாக மூடப்படும் என்றும் வெளிப்பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு மக்கள் வருவதை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறுந்தகவல்கள் மூலம் வதந்திகள் பரப்பப்படுவதாகவும் அதில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அநுர சேனாநாயக்க குறிப்பிட்டார். (செ–11)

## இவ்வருட தாக்குதலில் மனிதர்கள் 56 பேரும் 144 யானைகளும் உயிரிழப்பு

இலங்கையில் யானைக்கும் மனிதர்களுக்கும் இடையில் எழுந்துள்ள முரண்பாடு காரணமாக 56 மனிதர்களும் 144 யானைகளும் இந்த வருடத்தில் உயிரிழந்திருப்பதாக வனவிலங்கு திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

கடந்த வருடத்தில் 63 மனிதர்களும் 230 யானைகளும் உயிரிழந்திருப்பதாக அந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் யானைகளின் உயிரிழப்பில் வீழ்ச்சி காணப்படுகின்றபோதிலும் ஒப்பீட்டளவில் மனித உயிரிழப்பில் பெரிய வித்தியாசத்தைக் காண முடியவில்லை என அந்த அதிகாரி கூறியிருக்கின்றார்.

கடந்த வாரம் கல்கமுவ பகுதியில் யானை தாக்கியதில் 4 பேர் உயிரிழந்துள்ளார்கள். கடந்த மாதத்தில் மாத்திரம் 7 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

காலநிலை மாற்றம் காரணமாகவே மனிதருக்கும் யானைகளுக்கும் இடையிலான முறுகல் நிலை அதிகரித்திருப்பதாக வனவிலங்கு திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

கோடை காலத்தின் முடிவில் உணவு தேடி யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதனால் இரு தரப்பினருக்கும் இடையிலான முறுகல் நிலை ஏற்படுகின்றது. இது இருதரப்பினருக்கும் உயிரிழப்பில் சென்று முடிவடைகின்றது என்று வனவிலங்கு திணைக்களத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார். (செ–11)

## மாநாட்டில் பங்கேற்க கட்சிகளுக்கு அழைப்பு

இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அழைப்புகள் அடுத்த சில தினங் களில் மாநாட்டின் ஏற்பாட்டு குழுவினால் கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதனை தவிர நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாநாட்டிற்கான அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மாநாட்டில் கலந்துகொள்வதா இல்லையா என்பது அந்த கட்சிகளின் முடிவில் தங்கியுள்ளது. அழைப்பு விடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதால் நாங்கள் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கவுள்ளோம் என்றார். (செ–11)

## தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறியை யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தில் தொடர விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அதன் மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறியை தொடர்வதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று 16 முதல் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதோடு கல்வித் தகைமையாக கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் வரையில் கல்வி கற்றிருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட முகாமையாளர், NAITA, இல.44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்** எனவும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ–5)

## இராசாவின்தோட்ட வீதியை புனரமையுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டம் வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாது மிகவும் அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் போக்குவரத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் இவ்வீதி மேலும் சேதமடைந்து வரும் நிலையில் உடனடியாக இவ்வீதியை புனரமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் இவ்வீதியின் நிலை மேலும் மோசமடையலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வீதியால் பயணிக்கும் மாணவர்கள், பொதுமக்களின் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் இவ்வீதியின் புனரமைப்பு தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என கோரியுள்ளனர். (அ–5)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அகங்காரம் இருக்கும் வரை முக்தி இல்லை



- பாலும்நீரும்கலந்தது போன்றது உலகம். நீங்கள்ஓர் அன்னம் போன்று இருந்து, நீரைத் தவிர்த்து பாலைப் பருகுங்கள்.
- ஏகாந்தத்திலே (தனிமை) இருந்து நீங்கள் தியானம புரியும்போது உங்கள் குடும்பத்தவரிடமிருந்து உங்களை முற்றிலும் பிரித்துக் கொண்டு தனித்திருங்கள்.
- இல்லறத்தாருக்கு ஜீவர்களிடத்து அன்பு, பக்தர்களுக்குச் சேவை கடவுளின் புனித நாம உச்சாடனம் ஆகியவை கடமைகளாகும்.
- பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும், கறியுமேயாகும். பணத்தையே உங்களுடைய உயிரும் உடலுமெனவோ, உங்களது ஒரே குறியும் நோக்கமும் எனவோ கருதாதீர்கள்.
- அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடாது பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும் நீங்காது.
- இல்லறத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். கடவுளை நம்பி இருங்கள் பின்னர நீங்களாக எதையுமே செய்ய வேண்டியிராது. அன்னை காளி உங்கள் பொருட்டு யாவற்றையும் தாமே செய்வாள்.
- சம்சாரமாகிய பெருங்கடலில் ஆறு முதலைகள் உள்ளன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவையே அந்த முதலைகளாம்.
- பெண்ணாசையை ஒழித்தவன் உலகத்தையே துறந்தவன் ஆவான். அவனுக்கு இறைவன் வெகு அருகில் இருக்கிறார்.
- மாயை என்பது தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் முதலியவர்களிடம் ஒருவனுக்கு உண்டாகும் பாசமாகும். எல்லா உயிர்களிடமும் சமமாகப் பரவும் அன்புக்கு தயை என்று பெயர்.

# கொண்டாட்டத்தினால் சச்சினின் ஆட்டம் பாதிக்காது - ரிச்சர்ட்சன்

மைதானத்திலே டெண்டுல்கருக்கான விசேட கொண்டாட்டத்தினால் அவருடைய ஆட்டம் பாதிப்படையமாட்டாது என மேற்கிந்தியத்தீவின் முகாமையாளரும் முன்னாள் அணித் தலை வருமான ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடைபெறும் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியுடன் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

டெண்டுல்கரின் வழியனுப்பு விழா கொண்டாட்டத்தை வெகுசிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கொல்கத்தாவில் இன்று தொடங்கும் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் விளையாடும் டெண்டுல்கருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது.

இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவின் அணியின் முகாமையாளரும் முன்னாள் தலைவருமான ரிச்சி ரிச்சர்ட்சன் கொல்கத்தாவில் அளித்த பேட்டி ஒன்றில்,

டெண்டுல்கர் கிரிக்கெட் ஆட்டத்தின் சிறந்த தூதர். எல்லா வகையான வழியனுப்பு கொண்டாட்டத்துக்கு தகுதியானவர் டெண்டுல்கர். கொண்டாட்டங்கள் டெண்டுல்கரை சுற்றி நடந்தாலும் அவர் ஆடுகளத்தில் இறங்கியதும், இந்த கொண்டாட்டங்கள் அவரது ஆட்ட கவனத்தை பாதிக்காது.

டெண்டுல்கர் சிறந்த வீரர் மட்டுமின்றி நல்ல மனித நேயமும் கொண்டவர். கிரிக்கெட்டுக்கு அளித்திருக்கும் பங்களிப்பு குறித்து வார்த்தையால் விவரிப்பது முடியாத காரியம். சாதனைகள் பல படைத்தும் டெண்டுல்கர் பணிவுடன் இருப்பது எனக்கு மிகவும் பிடித்தமானதாகும். அவர் எப்போதும் மக்களால் பாராட்டப்படக்கூடியவர்.

டெண்டுல்கரின் வழியனுப்பு விழா தொடரில் விளையாடுவது எங்களுக்கு மகிழ்ச்சி தான். அதே நேரத்தில் இந்த போட்டி தொடரில் வெல்ல வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். தற்போது இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இந்திய அணியில் சில சிறப்பான வீரர்கள் உள்ளனர் என்றார்.



# இந்தியாவுக்கு மீண்டும் தங்கம்

ஆசிய வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டாவது தங்கம் கிடைத்தது. கலப்பு இரட்டையரில் இந்தியாவின் அபிஷேக் வர்மா, லில்லி சாணு ஜோடி தங்கம் வென்று அசத்தியது.

தைபேவில் 18ஆவது ஆசிய வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் 'காம்பவுண்டு' பிரிவு கலப்பு இரட்டையர் இறுதி ஆட்டத்தில், இந்தியாவின் அபிஷேக் வர்மா, லில்லி சாணு ஜோடி 151-150 என்ற புள்ளி கணக்கில், ஈரானின் மினோ அபேடி, அமிர் காஜம்போர் ஜோடியை வீழ்த்தி தங்கம் வென்றது. இது, இத்தொடரில் இந்தியாவுக்கு கிடைத்த இரண்டாவது தங்கம். முன்னதாக 'காம்பவுண்டு' பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டியில், அபிஷேக் வர்மா, ரத்தன் சிங், சந்தீப் குமார் ஆகியோர் அடங்கிய இந்திய அணி தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. தரவரிசை

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச போட்டித் தொடர் முடிவடைந்துள்ளதையடுத்தே இந்தத் தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் துடுப்பாட்டத்தில் முதலிடத்தை விராத் கோலி பெற்றுள்ளார். இதுவரை காலமும் முதலிடத்தில் காணப்பட்ட ஹசிம் அம்லாவைப் பின்தள்ளியே அவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அத்தோடு இத்தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஜோர்ஜ் பெய்லி 6 இடங்கள் முன்னேறி 3ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் சயீட் அஜ்மல் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதுவரை காலமும் 3ஆவது இடத்தில் காணப்பட்ட அவர் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தைப் பெற்றார். முதலிடத்தில் காணப்பட்ட சுனில் நரைன் ஓர் இடம் பின்தங்கியுள்ளதோடு, முதலிடத்தில் இணைந்து காணப்பட்ட ரவீந்திர ஜடேஜா 2 இடங்கள் பின்தங்கி 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.


சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் மொஹமட் ஹபீஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அவர் ஷகிப் அல் ஹசனை முந்தியே முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

# ஆடுகளத்தை பார்வையிட சர்மாவுக்கு அனுமதி மறுப்பு

ஈடன் கார்டன் மைதானத்தின் ஆடுகளத்தை பார்வையிட ரோகித் சர்மாவுக்கு அனுமதிமறுத்ததால் புதிய சர்ச்சை வெடித்தது. இந்தியா, மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இப்போட்டியில் சாதிக்க இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆடுகளத்தை பார்வையிட ரோகித சர்மா விரும்பினார். ஆனால் ஆடுகள பராமரிப்பாளர் பிரபிர் முகர்ஜி அனுமதி மறுத்தார். அணித் தலைவர் மற்றும் பயிற்சியாளர் மட்டுமே ஆடுகளத்தை பார்வையிட முடியும், என்று திட்டவட்டமாக கூறினார். இதனால் மிகுந்த ஏமாற்றமடைந்த ரோகித், மீண்டும் வழக்கமான பயிற்சிக்கு திரும்பினார். அதேவேளையில் இந்திய அணியின் பயிற்சியாளர் பிளட்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, வேகப்பந்துவீச்சா ளர்களான இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமாரை, ஆடுகளத்துக்கு அருகில் பயிற்சி மேற்கொள்ள அனுமதி அளித்தார்.

# வெட்டலுக்கு 7 ஆவது வெற்றி



அபுதாபி யஸ் மரீனா திடலில் இடம்பெற்ற ஆண்டின் 17ஆவது சுற்று ஃபோர்மியுலா வன் போட்டியிலும் ரெட் புள் ரேசிங் அணியைச் சேர்ந் செபாஸ்டியன் வெட்டல் வெற்றி பெற்றார். இதன் மூலம் தொடர்ச்சியா ஏழாவது வெற்றியை பெற்று மைக்கல் சூமாக்கரின் சாதனையை சமன் செய்துள்ளார்.


போட்டியின் ஆரம்பத்தில் மார்க் வெபர், முதல் நிலையிலிருந்து ஆரம்பித்திருந்த போதிலும், செபாஸ்டியன் வெட்டலின் ஆக்ரோஷமான பந்தயத்தின் காரணமாக, போட்டியின் நிறைவில் சுமார் 30 செக்கன் வித்தியாசத்தை தனக்கும், இரண்டாமிடத்தில் நிறைவு செய்த மார்க் வெபருக்கும் இடையில் பதிவு செய்திருந்தார். மூன்றாமிடத்தை மேர்சடீஸ் அணியின் நிகோ ரொஸ்பேர்க் தன்வசப்படுத்தியிருந்தார்.

இந்த போட்டி ஆரம்ப சுற்றிலேயே லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் விபத்தின் காரணமாக வெளியேறியிருந்தார். 2013ஆம் ஆண்டில் மேலும் இரண்டு போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் அடுத்த சுற்றுப் போட்டி அமெரிக்காவின் ஒஸ்டின் திடலில் நவம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அபுதாபி போட்டியைத் தொடர்ந்து, அணிகள் தரப்படுத்தலில் ரெட்புள் ரேசிங் அணி 513 புள்ளிகளுடன் முதலிடத்திலும், 334 புள்ளிகளுடன் மேர்சடீஸ் அணி இரண்டாமிடத்திலும், 323 புள்ளிகளுடன் பெர்ரா அணி மூன்றாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

சாரதிகள் தரப்படுத்தலில், 2013ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை செபாஸ்டியன் வெட்டல் வென்றுள்ளதை தொடர்ந்து, தரப் படுத்தல் பட்டியலில் 347 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் காணப்படு கிறார். பெர்ராரி அணியின் பெர்ணான்டோ அலொன்சோ இரண்டாமி டத்தில் 217 புள்ளிகளுடனும், மூன்றாமிடத்தில் லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் 183 புள்ளிகளுடனும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் அணியில் களமிறங்க விரும்புகிறார் பெய்லி



டெஸ்ட் போட்டிகளின் சவாலுக்குத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தற்காலிகத் தலைவரான ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார். தற்போது சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி அண்மையில் இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் அணித்தலைவராகச் செயற்பட்டிருந்த ஜோர்ஜ் பெய்லி மிகச் சிறப்பான துடுப்பாட்டப் பெறுபேறை வெளிப்படுத்தியிருந்தார்.

அண்மைக்காலமாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் ஜோர்ஜ் பெய்லி மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திவரும் நிலையில், இம்மாதத்தில் ஆரம்பிக்கவுள்ள ஆஷஷ் தொடரில் ஜோர்ஜ் பெய்லி சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளுக்குத் தயாராக உள்ளாரா எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ஜோர்ஜ் பெய்லி, தயாராக இருப்பதாக தான் உணர்வதாக அவர் குறிப்பிட்டார். தனது வாழ்வில் தான் விளையாடிய கிரிக்கெட்டில் தற்போதே மிகச் சிறப்பான கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

31 வயதான ஜோர்ஜ் பெய்லி, தனது வயது காரணமாக தனக்கு அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாது என்பதை உணர்வதாகவும், ஆகவே கிடைக்கும் வாய்ப்பில் தனக்கு விரும்பியவாறு விளையாட விரும்புவதாக ஜோர்ஜ் பெய்லி குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற சில தொடர்களில் தான் சிறப்பாக விளையாடியமை காரணமாக அதிக தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, அதன் காரணமாக தனது பாணியிலான விளையாட்டின் மீது தைரியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.



எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருக்காக பயிற்சியில் ஈடுபடும் இங்கிலாந்து வீரர்கள்.

# யாழ் மாவட்ட ரீதியிலான கால்பந்தாட்டப் போட்டி

ஊரெழு றோயல் அணி யாழ். மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகளினை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

64 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப்போட்டியில் முதல் மூன்று சுற்றுக்களும் விலகல் முறையில் நடைபெற்று, 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

தொடர்ந்து 8 அணிகளுக்கு மான போட்டிகள் லீக் முறையில் நடைபெற்று வந்தது.

கடந்த சனிக்கிழமை (02) நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 05: 03 என்ற கோல் அடிப்படையில் வல்வை அணியினையும், ஊரெழு றோயல் அணி 04:03 என்ற கோல் கணக்கில் இளவாலை ஹென்றிஸ் அணியினை வென்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி 02: 01 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியினையும், மயிலங்காடு ஞானமுருகன் 05: 01 என்ற கோல் கணக்கில் றெட் றேஞ்சர்ஸ்அணியினையும் வென்றன.

திங்கட்கிழமை (04) நடை பெற்ற போட்டியில் இளவாலை ஹென்றிஸ் அணி 04: 02 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியினையும், நாவாந்துறை சென்.மேரிஷ் அணி 05: 02 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணியினையும் வென்றன.

# தென்னாபிரிக்காவிற்கெதிரான பாகிஸ்தான் குழாம் அறிவிப்பு



ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட இருபது -20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மொஹமட் ஹபீஸ் தலைமையிலான 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் பாகிஸ்தானின் சிரேஷ்ட வீரர்களான அப்துல் ரஸாக், சொய்ப் மலிக் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். இளைய சகலதுறை வீரர்களுக் குப் பதிலாகவே இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் சிம்பாப்வேயில் இடம்பெற்ற இருபது - 20 தொடரில் பங்குபற்றிய பாகிஸ்தான் அணியில் இடம்பெற்ற அசாத் அலி, அன்வர் அலி, ஹரிஸ் சொஹைல், சுல்பிகர் பாபர், சப்ராஸ் அஹமட் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக சொய்ப் மலிக், அப்துல் ரஸாக், உமர் அக்மல், அப்துர் ரெஹ்மான் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதலாவது இருபது - 20 சர்வதேசப் போட்டி நவம்பர் 13ஆம் திகதியும், இரண்டாவது போட்டி நவம்பர் 15ஆம் திகதியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷெஷாத், உமர் அக்மல், உமர் அமின், ஷகிட் அப்ரிடி, சொகைப் மசூத், அப்துல் ரஸாக், சொஹைல் தன்வீர், மொஹமட் இர்பான், யுனைட் கான், சயீட் அஜ்மல், சொய்ப் மலிக், அப்துர் ரெஹ்மான்

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரம் போட்டி

அரச அதிபருக்கான கரம் சுற்றுப் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

இதில் ஊர்காவற்துறை பிரதேச செயலகம் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

இரண்டாம் இடத்தினை கரவெட்டி பிரதேச அணி பெற்றுக்கொண்டது.

# பயிற்சிப் போட்டியில் இலங்கை




இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 2 இருபது - 20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான தொடருக்கு முன்னதாக இலங்கை அணி பயிற்சிப் போட்டிகளில்பங்குபற்றவுள்ளது.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தொடர் நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், பயிற்சிப் போட்டிகள் 5ஆம், 7ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இலங்கை அணி அண்மைக் காலத்தில் சர்வதேசப் போட்டிகள் எவற்றிலும் விளையாடியிருக்காத காரணத்தால், நியூசிலாந்துத் தொடருக்காக வீரர்களைத் தயார் படுத்துவதற்காக இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓர் அணியில் இலங்கையின் பிரதானமான வீரர்கள் இடம்பெற்றிருக்க, மற்றைய குழாமில் இலங்கை "ஏ" குழாமில் இடம்பெறும் வீரர்களோடு, சில சர்வதேச வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்கள்.

அணி 1: திலகரட்ண டில்ஷான், திமுத் கருணாரத்ன, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, அஞ்சலோ மத்தியூஸ், அஷன் பிரியஞ்சன், நுவான் குலசேகர, சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், லசித் மலிங்க, அஜந்த மென்டிஸ்

மேலதிக வீரர்கள்: அஞ்சலோ பெரேரா, றமித் றம்புக்வெல்ல, இசுரு உதான

அணி 2: குசால் பெரேரா, உபுல் தரங்க, லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால், கித்துருவன் விதானகே, சத்துரங்க டீ சில்வா, திஸார பெரேரா, சீக்குகே பிரசன்ன, டில்ருவான் பெரேரா, ஷமின்ட எரங்க, சுரங்க லக்மால்

மேலதிக வீரர்கள்: நுவான் பிரதீப், இஷான் ஜெயரத்ன, மிலிந்த சிரிவர்தன.

# ரவீந்திர ஜடேஜாவுக்கு காயம்

## மே. தீவுகள் தொடரிலிருந்து விலகல்




இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ரவீந்திர ஜடேஜாவுக்குப் பதிலாக யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பாக இந்திய அணி ஆராய்ந்து வருகிறது.

அண்மைக்காலத்தில் இந்திய டெஸ்ட் அணியின் முக்கிய வீரராகக் காணப்பட்ட ரவீந்திர ஜடேஜா மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட தோறபட்டை உபாதை காரணமாகவே அவர் இத்தொடரில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ரவீந்திர ஜடேஜாவிற்குப் பதிலாக யாரைக் களமிறக்குவது என்ற குழப்பம் இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளராகவும், 7ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராகவும் ரவீந்திர ஜடேஜா காணப்பட்ட நிலையில், தற்போது பந்து வீச்சாளரையா, துடுப்பாட்ட வீரரையா களமிறக்குவது என்பது தொடர்பாக இந்தியா ஆராய்வதாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் சுழற்பந்து வீச்சாளரோடு இந்திய அணி களமிறங்க முடிவு செய்தால் அமித் மிஷ்ராவும், துடுப்பாட்ட வீரரோடு களமிறங்க விரும்பினால் றோகித் சர்மா அல்லது அஜின்கியா ரஹானேயோடும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சச்சின் டெண்டுல்கரின் இறுதித் தொடராக அமையவுள்ள இந்தத் தொடரின் முதலாவது போட்டி இன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்ட இன்றைய போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில்இன்று பி.ப 3.30 மணிக்கு பொலிகண்டி விண்மீன் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணியும், பி.ப 4.30 மணிக்கு வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும் மோதவுள்ளன. (24)

## குழம்புகிறது...

அது தொடர்பில் முடிவு செய்யும்.

இவ்விடயத்தில் மத்திய அரசு எடுக்கும் முடிவுதான் காங்கிரஸ் கட்சியின் முடிவாக இருக்கும். பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர்தான் பிரதமர் மன்மோகன்சிங் முடிவு எடுப்பார் என்று பதிலளித்துள்ளார். இதனிடையே சென்னையில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் செயலகத்திற்கான மத்திய இணையமைச்சர் நாராயணசாமி, பொதுநலவாய மாநாட்டில்பிரதமர்மன மோகன் சிங் கலந்து கொளவது தொடர்பில் அவர்தனிப்பட்ட முறையல் எந்தவொரு முடிவும் எடுக்க முடியாது.

இது தொடர்பில் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மற்றும் தலைவர்களின் கருத்துக்களின் அடிப்படையில தான்முடிவுசெய்யப்படும் எனத்தெரிவித்திருந்தார்.

இவ் விவகாரம் தொடர்பில் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் அக்கட்சியின் தலைமை குழப்பமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. (செ-11)

## அரசைத் தோற்கடி...

களை களைந்து கட்சியினர் அனைவரும் ஒன்றாகவேலைசெய்ய கூடிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கியமான கட்சியாக உள்ளது. கடந்த காலத்தை மறந்து அரசாங்கத்தின் சர்வாதிகார ஆட்சியை தோற்கடிக்கவேண்டும்.

100 வீத ஆட்சி மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்த முடியாது. இந்த தருணத்தில் கட்சியில் செய்யப்பட்டுள்ள பாரிய மாற்றங்களை ஏற்க வேண்டும் என்றார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கரு ஜயசூரிய தலைமையிலான தலைமைத்துவச் சபைக்கு நேற்று அங்கீகாரம் வழங்கியது.

எவ்வாறாயினும், இந்த தலைமைத்துவச் சபையில் சில குறைப்பாடுகள்உள்ள தாக கூறி, அதில் அங்கம் வகிப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச நிராகரித்தார். (செ-11)

## மாநாட்டில் இந்தியா...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில்நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்பதை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இந்ததீர்மானம்தொடர்பில் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்தியா பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என உத்தரவிட வேண்டும்என கேட்டும்மதுரை உச்சநீதிமன்ற கிளையில மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை எல்லீஸ் நகரைச் சேர்ந்த சட்டத்தரணி ராய்ஸ் இமானுவேல் தொடர்ந்த இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற கிளை நீதபதிகள் ஜெயச்சந்திரன், வைத்தியநாதன ஆகியோர் வழக்கு விசாரணையை நேற்று ஐந்தாம் திகதிக்கு ஒத்தி வைத்தனர்.

அதன்படி நேற்று காலை வழக்கு விசாரணை நடைபெற்றது. நீதிபதிகள் ஜெயச்சந்தரன், வைத்திய நாதன் ஆகியோர் வழக்கை விசாரித்து, விசாரணையை தள்ளி வைப்பதாக அறிவித்தனர்.

இதேகோரிக்கையை வலியுறுத்தி தொடரப்பட்ட வழக்கு சென்னை உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி அறிய அந்த வழக்கின் ஆவணங்களை தாக்கல் செய்ய மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளோம். அவை வந்தவுடன் ஆய்வு செய்து பினனர் வழக்கு விசாரிக்கப்படும். அதுவரை இந்த வழக்கை தள்ளி வைக்கிறோம்என்று கூறப்பட்டுள்ளது. (செ-11)

## முள்ளிவாய்க்...

காவல்துறை பதில் அளிக்கவில்லை.

இதனால் திறப்பு விழா தொடர்பான ஏற்பாடுகளுக்கு காவல் துறைஅனுமதிஅளிக்கவும் காவல்துறை பாதுகாப்பு வழங்கவும்உத்தரவிட வேணடும என மனுவொனறை தாக்கல்செய்தார.

இந்தமனுவைவிசாரித்த நீதிபதி டி.ராஜா, பொலிஸ் நிபந்தனையுடன் முள்ளிவாய்க்கால்நினைவு முற்றம திறப்பு விழா நிகழ்ச்சியை நடத்த அனுமதி அளித்து தீர்ப்பளித்தார். (செ-11)

## இராணுவ ஜீப்...

மாங்குளத்தில் இருந்து குருணாகல் பகுதிக்கு சென்று கொண்டிருந்த ஜீப்பே மாட்டுடன் அதிகாலை 5 மணியளவில் மோதியதில் ஸ்தலத்தில் ஒருவர் பலியாகியதுடன் மற்றையவர் வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை படுகாயமடைந்த மூவரும வவுனியா வைத்தய சாலையின் விபதுக்கள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் ஏ.டபிள்யூ. பண்டார, டபிள்யூ.கே. தசாநாயக ஆகியோர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை இராணுவஜீப்மாட்டுடன மோதிய பகுதியில்மாடுகள் கடக்கும் பாதையென வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அடையாளமிடப்பட்ட பதாகை நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-250,266)

## 150 படையினரு...

தையே தற்காலிகமாக நிர்மாணிக்க வேண்டியிருந்தது.

இறுதியாக, வெகு சாதாரண மாக நீதிபதி முறையே குற்றவாளிகளின் இலக்கங்களையும், அவர்களுக்கான தண்டனையையும் வாசித்தார்.

தலைநகர் டாக்காவில் பங்களாதேஷ் ரைபிள் படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தில், முன்னர நடந்த 30 மணி நேர கிளர்ச்சியின் போது, கொலை மற்றும் சிததிரவதைகளில ஈடுபட்டதாக பல முன்னாள் எல்லைக் காவலர்கள் குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

அந்த கிளர்ச்சியில் 57 இராணுவத்தனர் உட்பட 74 பேர் கொல்லப்பட்டனர்.

நாடளாவிய கிளர்சியில் சம்பந்தப்பட்டதாக ஏற்கெனவே சுமார 6000 படையினர் சிறையிடப்பட்டுள்ளனர்.

அனைவரையும் கூட்டமாக வைத்துக் குற்றஞ்சாட்டி, தீர்ப்பு வழங்கப்பட்டதாக இந்த வழக்கை விபரித்த, நியூயோர்க கைதளமாகக்கொண்ட மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் (ஹியூமன் ரைட்ஸ் வாட்ச்) அந்த விசாரணை நயாயமற்றது என்று கூறியுள்ளதுடன, மறுவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளது. (செ-11)


Spoken English with Grammar
For Beginners
Duration : 3 Months
New Batch 9-Nov-2013
(C-5386)
iCS International Academy
No 77, Clock Tower Road, Jaffna.
021 - 7306000 , 077- 3013060

வெளிவந்துவிட்டது.
2014, 2015 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஆசிரியர் N. சுந்தாவின்
வினாத்தாள் I இல் 100 % மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்வதற்கான
DVD + நூல்
1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான விளக்கமும்
பல மாணவர்களின் வசதிகருதி நூலின் விலை 850/- இருந்து 590/- க்கு விற்பனையாகிறது.
கிடைக்கும் இடம்-
- அன்னை புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை-நெல்லியடி.
(C-5377)
தொடர்புகளுக்கு- 0719003171

மென்பனி தூவும்""""
கனடா தேசத்தில்
படிக்க மாதம் மூன்று இலட்சம் வரை உழைக்க அரியவாய்ப்பு
- மேற்படி விசா தொடர்பான சில உண்மைப் பதிவுகள்
- 6 பேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். இரண்டு பேர் விசா நிராகரிக்கப்பட்டுள்ளனர்.
- உரிய திகதியில் விசா வெற்றியளிக்காத காரணத்தினால் 5 பேர் இதில் இருந்து பின் வாங்கி உள்ளனர்.
- இது தங்களது கல்வித் தகைமைக்கு ஏற்றவாறு சட்ட வரம்பிற்கு உட்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு நியாயமான காலம் தேவைப்படும்.

இவ் விளக்கம் கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி பிரசுரமாகிறது
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-5394) தொலைபேசி 0212219016, 0215689090





பொன்னான சந்தர்ப்பம்
புத்தம் புதிய வரவு...
IT டிப்ளோமாதாரிகள் ஆஸ்திரேலியாவில் படிக்க உழைக்க தாமாக நிரந்தரக் குடியுரிமை 2 வருடத்தில் பெற அரியவாய்ப்பு
இது தொடர்பான சகல சட்ட ஆவணங்களையும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.
விசா துணை வகுப்பு 457
நிபந்தனைகள் :-
- IT துறையில் ஆங்கில மொழி மூலமான டிப்ளோமா. 40 வயதுக்கு கீழ்.
- குடும்பமாக சென்று 2 வருடத்தில் நிரந்தர குடியுரிமை பெற சட்டரீதியாக வாய்ப்பு
குறிப்பு :- மேற்படி துணை வகுப்பு 457 நிபந்தனைகளை சுயமாக இணையத்தில் ஆய்வு செய்த பின்னர் திசைகாட்டிக்கு ஆலோசனைக்கு வருவது வரவேற்கத்தக்க விடயமாகும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-5394) தொலைபேசி 0212219016, 0215689090





வெளிநாட்டு உயர்கல்வி
பகுதி நேர வேலைவாய்ப்புடன்
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/-
- பாடநெறிக்கட்டணம் 350,000/- 1 வருடம்
கட்டணம் 100% வீசா வந்தபின் வீசா 14 நாட்களில்
Hotline: 077 3013060
உயர் கல்வி அனுசரணை
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...
எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.
iCS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060
(C-5387)

Day care for Infants, Toddlers & Kids
Infant/Toddler care
Mon - Fri - 7.30 - 5.30
Kid care
Mon - Fri - 12.30 - 5.30
* Age-appropriate activities
* Well supervised environment
* Snacks & Meals on request
(C-5401)
Visalam
127/1 Temple Road Jaffna
021 221 9695, 075 979 9695
admin@visalamholdings.com

மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.
4½ ரக்டர் 17500
தொடர்புகளுக்கு:- தீபன்
077 676 6499, 077 759 0792
(சி-5385)

உடனடி வேலை வாய்ப்பு
வெளிநாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது நட்பு நிறுவனத் திற்கு கட்டடத் தொழிலாளர்கள், விவசாயம் மற்றும் பண்ணை வேலை செய்யக்கூடியவர்கள்உடனடியாக தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு:
021 730 6000
(C-5392)

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
FRENCH CLASSES
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(9-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...






உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி
WebDesigning,Multimeida,Networking
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> Free என type செய்து 772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.
(C-5402)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.